بسم الله الرحمن الرحيم نحمده ونصلى على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 49

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

07 ரபீவுல் சானி 1441 ஹிஜ்ரி கமரி 05 ஃபதஹ் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

05 டிசம்பர் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

فَبِمَا رَحْمَةٍ مِّنَ اللّٰهِ لِنْتَ لَهُمْ ۚ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيْظَ الْقَلْبِ لَانْفَضُّوْا مِنْ حَوْلِكَ ۖ فَاعْفُ عَنْهُمْ وَاسْتَغْفِرْ لَهُمْ وَشَاوِرْهُمْ فِي الْأَمْرِ ۚ

அல்லாஹ்விடமிருந்து (உமக்கு வழங்கப் பெற்று)ள்ள மகத்தான அருளின் காரணமாக(வே), நீர் அவர்களுக்கு மென்மை வாய்ந்தவராகத் திகழ்கின்றீர். நீர் தீய ஒழுக்கமும், கடின உள்ளமும் உடையவராக இருந்திருப்பின் அவர்கள் உம் சூழலில் இருந்து சிதறிச் சென்றிருப்பர். எனவே நீர் அவர்களை மன்னித்து அவர்களுக்காக (இறைவனிடம்) மன்னிப்புக் கோருவீராக. மேலும் முக்கிய விஷயங்களில் அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக. (3:160)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَيُّ الْقَيُّوْمُ

அல்லாஹ் எத்தகையவனாக இருக்கின்றான் என்றால், அவன் முழுமை பெற்றவனும் எல்லா விதமான குறைகளிலிருந்தும் தூய்மையானவனும் ஆவான். மேலும் அவனே வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் ஆவான். அவன் (தானாகவே) நிலைத்திருப்பவன் மற்றும் (மற்றெல்லாவற்றையும்) நிலைத்திருக்கச் செய்பவன் ஆவான். மேலும் அவனைத் தவிர வேறு எதிலும் தானாகவே நிலைத்திருப்பவன் மற்றும் (மற்றெல்லாவற்றையும்) நிலைத்திருக்கச் செய்யக்கூடிய பண்புகள் இருக்கவில்லை.

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

## அற்புதங்கள்

இறைவன் தனது நடைமுறைக்கு மாற்றமாக எந்தவொரு விஷயத்தையும் செய்ய மாட்டான் என்பது உண்மையான விஷயமாகும். ஆனால் அவன் காரணிகளை ஏற்படுத்துகின்றான். அந்த காரணிகளை நாம் அறிந்திருந்தாலும், அறியாவிட்டாலும் அவன் நிச்சயமாக காரணிகளை ஏற்படுத்துகின்றான். எனவேதான் சந்திரன் பிளப்பது அல்லது يٰنَارُ كُوْنِيْ بَرْدًا وَّسَلٰمًا ஆகிய அற்புதங்களும் காரணிகளின்றி ஏற்பட்டதில்லை. மாறாக அதுவும் மறைவிலும் மறைவான காரணிகளின் விளைவே ஆகும்... ஆனால் இதனை தத்துவாதிகளால் புரிந்து கொள்ள முடியாது...

நமது மார்க்கம் என்னவென்றால், அல்லாஹ் நாடினால் இந்த மறைவான காரணிகளைப் பற்றி ஏதாவதொரு நபருக்கு அறிவித்துக் கொடுக்கலாம். ஆனால் அவ்வாறு கூறுவது என்பது கட்டாயம் அல்ல.

பாருங்கள்! மனிதன் தனக்காக வீடு கட்டும்போது அதில் எல்லா வசதிகளுக்கான பொருட்களும் இருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொள்கின்றான். முதலாவதாக, உள்ளே செல்வதற்கும், அதேபோன்று வெளியேறுவதற்கும் வாசல்களை அமைக்க வேண்டும் என்பதை கருத்தில் கொள்கின்றான். யானை, குதிரை, வாகனங்கள் போன்றவைகள் இருந்தால் அதற்கேற்ப இந்த ஒவ்வொரு பொருட்களையும் உள்ளே கொண்டு செல்வது மற்றும் வெளியே எடுப்பது ஆகியவற்றிற்கேற்ப வாசல்களை கட்டுகின்றான். அதுவன்றி ஒரு பாம்பு செல்லும் வகையில் அவன் சிறிய துளையை மட்டும் போடுவதில்லை....

எனவேதான் அல்லாஹ் கூறுகின்றான்:

اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَيُّ الْقَيُّوْمُ

அதாவது அல்லாஹ் எத்தகைய இருப்பாக இருக்கின்றான் என்றால், அவன் முழுமை பெற்றவனும் எல்லா விதமான குறைகளிலிருந்தும் தூய்மையானவனும் ஆவான். மேலும் அவனே வணங்கப்படுதற்கு தகுதியானவன் ஆவான். அவன் (தானாகவே) நிலைத்திருப்பவன் மற்றும் (மற்றெல்லாவற்றையும்) நிலைத்திருக்கச் செய்பவன் ஆவான். மேலும் அவனைத் தவிர வேறு எதிலும் தானாகவே நிலைத்திருப்பவன் மற்றும் (மற்றெல்லாவற்றையும்) நிலைத்திருக்கச் செய்யக்கூடிய பண்புகள் இருக்கவில்லை.

ஆக இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இறைவனைத் தவிர இந்த பிரபஞ்சத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய எந்த இருப்பும் கிடையாது. அல்லது ஒவ்வொரு பொருளும் உருவாகுவதற்கு காரணமாகவும், நிலைத்திருப்பதற்கு காரணமாகவும் இருக்கின்ற அத்தகைய எந்த இருப்பும் கிடையாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 99 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### காதியான் ஆண்டு மாநாடு தொடர்பான முக்கிய அறிவிப்பு

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் காதியான் ஆண்டு மாநாடு தொடர்பாக, இது 125 வது ஆண்டு மாநாடு என்று பத்ர் பத்திரிகையில் அறிவிப்பு செய்யப்பட்டு வந்தது. இந்த வரலாற்று சிறப்புமிக்க மாநாடு தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் சில குறிப்பான நிகழ்ச்சிகளுக்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். இது தொடர்பான தகவலை சுற்றறிக்கை மூலமாக ஜமாஅத்திற்கும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் ''தாரீகே அஹ்மதிய்யத்'' காதியான் துறையின் ஆய்வின் அடிப்படையில், **2019 ஆம் ஆண்டு நடைபெறும் ஆண்டு மாநாடு 125 வது ஆண்டு மாநாடு அல்ல. மாறாக 126 வது ஆண்டு மாநாடாகும்** என்ற தகவல் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் மிகுந்த பரிவுடன் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். மேலும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கான வழிகாட்டலை வழங்கியுள்ளார்கள்.

(செயல் தலைவர், நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ் இவர்களது உள்ளங்களை இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை புரிந்து கொள்வதற்காக திறப்பானாக. மேலும் இஸ்லாத்தை இவர்கள் ஏற்றுக் கொள்பவர்களாக திகழ்வார்களாக**

**2019 ஆம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களில் ஐரோப்பிய சுற்றுப் பயணத்தின்போது நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட விருந்தினர்களின் நற்தாக்கங்கள்**

**ஒரு மிகப்பெரிய ஆலிமும், இறையச்சம் கொண்டவரும், நோன்பையும், ஐவேளை தொகைகையும் பேணக் கூடியவரும், தஹஜ்ஜுத் தொழக் கூடியவரும், கலப்பற்ற நபரும், கிலாஃபத்தின் உதவியாளரும் ஆகிய இந்தியாவின் கேரளா மாநிலத்தின் பாலக்காடு மாவட்டத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய மவ்லவி முஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்களின் வஃபாத் தொடர்பான அறிவிப்பை ஹுஸூர் அவர்கள் செய்தவாறு அன்னாரது நற்குறிப்பையும் எடுத்துக் கூறினார்கள். மேலும் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஅல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாயிலில் 01 நவம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **01 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த நாட்களில் நான் ஐரோப்பாவின் சில நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தேன். அதில் ஹாலாந்து, பிரான்ஸ் நாட்டின் ஆண்டு மாநாடுகளும் நடைபெற்றன. அதுமட்டுமின்றி பள்ளிவாயில் திறப்பு விழா மற்றும் அந்நியர்களுடனான பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பிரான்ஸில் UNESCO-வின் கட்டடத்தில் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அங்குள்ள நிர்வாகம் இந்த நிகழ்ச்சிக்கான அனுமதி அளித்திருந்தது. மேலும் அவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சியில் இஸ்லாமிய போதனைகளை எடுத்துரைப்பதற்கும் கல்வி மற்றும் அறிவியல் முன்னேற்றங்களில் முஸ்லிம்களின் பங்களிப்பை எடுத்துரைப்பதற்கு பாக்கியம் கிடைத்தது.

UNESCO என்பது ஐநாவின் ஒரு அமைப்பாகும். அது கல்வி, அறிவியல், பண்பாடு போன்றவற்றை வளர்ப்பதற்காக நிறுவப்பட்டுள்ளது. அதன் பணிகளில் பத்திரிகை சுதந்திரம், வறுமை ஒழிப்பு போன்ற பணிகளும் அடங்கும்.

எவ்வாறிருப்பினும் அவர்களின் இந்த பணியின் அடிப்படையில் இஸ்லாமிய போதனைகள் மேலும் முந்தைய முஸ்லிம்களின் தொண்டுகள், அவர்களின் பங்களிப்பு மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் செயல்பாடுகள் ஆகியவற்றை எடுத்துரைத்தேன். அதேபோன்று ஜெர்மனியின் தலைநகரமான பெர்லினில் அரசியல்வாதிகள் மற்றும் அறிஞர் பெருமக்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைக்கும் பாக்கியம் கிடைத்தது.

ஐரோப்பிய மக்களின் எண்ணங்களில் ஒரு சிந்தனை வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஜெர்மனி மற்றும் வேறு சில நாடுகளில் இந்த சிந்தனை அதிகமாக உள்ளது. அதாவது இஸ்லாம் ஐரோப்பிய பண்பாட்டிற்கும், நாகரீகத்திற்கும் ஏற்புடையதல்ல. எனவே இஸ்லாம் இங்கு வரக்கூடாது. இங்கு வளரவும் முடியாது. மேலும் இஸ்லாம் ஐரோப்பாவிற்கு ஆபத்தானதாகும் போன்ற சிந்தனைகள் அவர்களிடம் காணப்படுகின்றன. இதுதொடர்பாக இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் நான் எடுத்துரைத்தேன். மேலும் அறிஞர் பெருமக்களும், அரசியல்வாதிகளும், தூதர அதிகாரிகளும் அங்கு வந்திருந்தனர். அவர்களிடம் நேர்மறையான பெரும் தாக்கம் ஏற்பட்டது. அதனை அவர்களே வெளிப்படுத்தவும் செய்திருந்தார்கள்.

இதேபோன்று ஏனைய நிகழ்ச்சிகளிலும் இஸ்லாமிய போதனை மற்றும் இஸ்லாத்தின் அறிமுகத்தை எடுத்துரைப்பதற்கு அல்லாஹ் எனக்கு நற்பாக்கியம் வழங்கி இருந்தான். அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ்வின் அருட்களைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் ஒவ்வொரு இடத்திலும் கிடைத்தது. தற்போது நான் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட சில அந்நியர்களின் தாக்கங்களை சுருக்கமாக எடுத்துரைப்பேன். இதிலிருந்து இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் புரிவதற்கும் அவர்களின் அச்சம் நீங்குவதற்கும் அந்த மக்களுக்கு ஒவ்வொரு இடத்திலும் சந்தர்ப்பம் கிடைத்தது என்பதும் வெளிப்படுகின்றது.

ஹாலாந்து நாட்டின் ஆண்டு மாநாட்டின் இரண்டாம் நாளன்று டச் விருந்தினர்களுடன் உரையாடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் 125 முஸ்லிம் அல்லாத டச் விருந்தினர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். அங்குள்ள நமது ஜமாஅத்தின் தலைமையகத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது.

அங்குள்ள கவுன்ஸிலர் தனது தாக்கத்தை எடுத்துரைத்தவாறு அவர் கூறுகின்றார்: நீண்ட காலத்திற்கு முன்பு இங்கு வருவதைக் கூட நான் விரும்பியது கிடையாது. அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் தொடர்பு வைப்பதை விரும்பியது கிடையாது. ஆனால் காலப்போக்கில் நல்ல தொடர்புகள் நல்லதாக ஆகிவிட்டன. நான் அங்கு சென்றபோது என்னை வரவேற்பதற்காக அவரும் அங்கு வந்திருந்தார்.

தொடர்ந்து அவர் கூறுகின்றார்: இதற்கு முன்பும் நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவைக் கேட்டுள்ளேன். மீண்டும் நான் அன்னாரின் சொற்பொழிவை கேட்க விரும்பினேன். அன்னார் ஆற்றிய உரையினால் நான் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். ஏனென்றால் இதன் மூலம் நமக்கிடையில் ஒரு நீண்ட ஆழமான உறவு ஏற்பட்டு விட்டது போன்று நான் உணர்கின்றேன். அதாவது ஜமாஅத் இங்குள்ள சமூகத்தின் ஒரு சுறுசுறுப்பான அங்கமாகும். அந்த தொடர்பு இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டதன் மூலமாக மேலும் வலிமையடைந்துள்ளது.

அதேபோன்று புரோட்டர் டம் என்பது அங்குள்ள ஒரு நகரமாகும். அங்கிருந்து வந்திருந்த கேமன் மீட்டர் சாஹிப் கூறுகின்றார்:

ஜல்ஸாவிற்கு வருவதற்கு முன்பு நான் அச்சத்திற்கு உள்ளாகியிருந்தேன். இந்த ஜல்ஸாவில் முஸ்லிம்கள் இங்கு ஒன்று கூடுகின்றார்கள். இங்கு என்ன நடக்கும் என்று தெரியாது என்று நான் பதற்றமடைந்திருந்தேன். ஆனால் எனக்கு இங்கு வந்ததும் ஆச்சரியம் ஏற்பட்டது. ஏனெனில் இங்கு அமைதியைப் பற்றிய பேச்சுக்கள் பேசப்பட்டன. உங்களது சொற்பொழிவில் எனக்கு பிடித்த விஷயம் என்னவென்றால், நீங்கள் மிக தைரியத்துடன் பேசினீர்கள். போப் பொதுவாக அமைதியைப் பற்றி பேசுகின்றார். ஆனால்

உங்களது கலீஃபா பகிரங்கமாக அதிகாரமிக்க சமுதாயத்தை நோக்கி உரையாடுகின்றார் என்று அவர் ஓர் அஹ்மதி நண்பரிடம் கூறியுள்ளார்.

அடுத்து ஒரு டச் கணவன் மனைவி கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் கூறுகின்றனர்: மாநாட்டின் சூழல் விநோதமாக இருந்தது. அனைவரும் நல்லொழுக்கமுடையவர்களாக இருந்தனர். சொர்க்கத்தைப் போன்ற ஒரு சூழலாக எனக்கு தென்பட்டது.

மேலும் எனது சொற்பொழிவு பற்றி அவர் கூறுகின்றார்: சொற்பொழிவால் எங்கள் மீது பெரும் தாக்கம் ஏற்பட்டது. மொழிபெயர்ப்பாளர்களும் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தினர். உடனுக்குடன் நல்ல மொழியாக்கம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்த விஷயம் மொழிபெயர்ப்பாளர்கள் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள் என்பதை சார்ந்தே உள்ளது. எனவே மொழியாக்கம் என்பது MTA துறையில் நடைபெறவே செய்கின்றன. பல்வேறு நாடுகளிலும் மொழியாக்கம் நடைபெறுகின்றன. நிகழ்ச்சிகளும், மாநாடுகளும் நடைபெறும்போது அங்கு மொழியாக்கம் சரியான முறையில் நடைபெற வேண்டும்.

மேலும் டேனீ ஹார்க்கிங் சாஹிப் என்ற ஒரு விருந்தனர் கலந்து கொண்டிருந்தார். அவர் கூறுகின்றார்: நான் கல்வி பின்னனி கொண்ட மனிதனாவேன். நான் ஒரு நிறுவனத்தில் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு டச் மொழியை கற்றுக் கொடுக்க தொடங்கினேன். அப்போது நான் ஒரு பாகிஸ்தானிய குடும்பத்தைச் சந்தித்தேன். அவர்கள் மொழி கற்பதற்காக அங்கு வந்து சென்றார்கள். தொடர்புகள் அதிகரித்தன.

மேலும் எல்லா வகையிலும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அவர்களிடம் நான் உறுதி அளித்தேன். அவர்களின் பிள்ளைகளும் என்னை சந்தித்தனர். ஒவ்வொரு வாரமும் என்னுடன் சிறிது நேரத்தை கழித்து வந்தனர். அந்தப் பிள்ளைகளிடமிருந்து எனக்கு ஜமாஅத்தைப் பற்றி தெரிய வந்தது. தற்போது நான் இங்கு வந்துள்ளேன். இங்கு வந்து நான் மிகவும் மகிழ்ச்சியை உணர்கின்றேன். உங்களது கலீஃபாவும் கூட அமைதி மற்றும் சகோதரத்துவத்தைப் பற்றி பேசுகின்றார்கள்.

அவர் கூறுகின்றார்: நான் ஒரு கிறிஸ்தவன் ஆவேன். ஆனால் நான் பார்த்துள்ளேன். உங்களது ஜமாஅத் அஹ்மதிகளுடன் மட்டுமின்றி அனைத்து மார்க்கத்தைச் சார்ந்தவர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்கின்றது. ஒரு முஸ்லிம் தலைவரிடமிருந்து இதுபோன்ற விஷயங்களை செவிமடுப்பது என்னிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால் இன்றைய சூழலில் இஸ்லாத்தைப் பற்றி தவறான சிந்தனைகள் உள்ளன. உலகில் பரவியுள்ள அமைதியின்மை குறித்து நீங்கள் பேசினீர்கள். மேலும் அமைதியை நிலைநாட்டுவதன் தேவையைக் குறித்தும் நீங்கள் பேசினீர்கள். நாம் பூமியில் ஒருவர் மற்றவருடன் இணைந்து வாழ்கின்றோம். எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து அமைதியை நிலைநாட்டுவதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து ஹாலாந்தில் அல்மேரே என்ற இடத்தில் பள்ளிவாசல் ஒன்று கட்டியுள்ளார்கள். அது முறையாக திறக்கப்பட்டது. அல்மேரே நகரத்தின் ஒரு சர்ச்சின் சேர்மன் ஓவே தஸல் சாஹிப் அவர்கள் வருகை தந்திருந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களது ஜமாஅத்தின் தூதுச் செய்தி அமைதிக்கான தூதுச் செய்தியாகும். உங்களது கலீஃபா அமைதி மற்றும் மார்க்க சுதந்திரத்தைப் பற்றி மிகச் சிறப்பான சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அல்மேரே நகரத்தில் முன்பு கத்தோலிக்க கிறிஸ்தவர்களும், பிராடஸ்டேன்ட் கிறிஸ்தவர்களும் இணைந்து வசித்து வந்தனர். இப்போது அஹ்மதிகளும் எங்களது நண்பர்களுடன் இணைந்து அமைதியாக வசிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

அவர் தனது சர்ச்சின் சார்பாக சில விஷயங்களை பேச வேண்டியதிருந்தது. அதை அவர் பேசினார். ஆனால் பொதுவாக அங்குள்ள மக்கள் அஹ்மதிகளைக் குறித்து நல்ல தாக்கத்திற்கு ஆளாகியுள்ளார்கள். இறை அருளால் அங்கு வசிக்கக்கூடிய அஹ்மதிகள் பிறருடன் இணைந்து வாழ்கின்றார்கள். மேலும் அமைதி நிறைந்த மக்களாக இருக்கின்றார்கள் என்பதே உள்ளூர் மக்களின் கருத்தாகும்.

ஸகரிய்யா என்ற அரபி நண்பர் ஒருவர் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: மிகவும் நல்ல நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. உங்களது கலீஃபாவின் சொற்பொழிவை நான் கேட்டேன். அவர் தற்போது இவ்வாறு கூறத் தொடங்கி விட்டார். நாம் அமைதியை விரும்புகின்றோம் என்றால் இந்த சொற்பொழிவின்படி செயல்பட வேண்டும்.

தொடர்ந்து அவர் கூறுகின்றார்: ஒரு அரபி என்ற அடிப்படையில் ஒன்றை நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். அதாவது உங்களது நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் திருக்குர்ஆன் ஓதப்பட்டது. இந்த நாடுகளில் வசித்தவாறு இதனை கேட்பதென்பது எனக்கு மிகவும் ஆச்சரியமானதாக உள்ளது. மேலும் எனக்கு இது மிகவும் பிடித்திருந்தது.

அடுத்து ஒரு உள்ளூர் விருந்தனர் அவர் பெண்மணி ஆவார். அவர் கூறுகின்றார்: நிகழ்ச்சிக்கான ஏற்பாடு மிகச் சிறந்த முறையில் செய்யப்பட்டிருந்தது. நான் நிகழ்ச்சியைப் பார்த்தேன். சொற்பொழிவைக் கேட்டேன். உங்களது கலீஃபாவின் சொற்பொழிவு மிகச் சிறப்பாக இருந்தது. பெண்களுக்கான ஏற்பாடு மிகச் சிறந்ததாக இருந்தது. நான் முதன் முறையாக இங்கு வந்துள்ளேன். இனி நான் மீண்டும் பள்ளிவாசலுக்கு வருவேன். ஜமாஅத் பெண்களை நான் மீண்டும் சந்திப்பேன். மேலும் நான் எனது தொடர்புகளை அதிகரித்துக் கொள்வேன்.

அடுத்து ஒரு உள்ளூர் விருந்தினர் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: முஸ்லிம்களின் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்வது என்பது எனக்கு முதலாவது சந்தர்ப்பம் ஆகும். வருவதற்கு முன்பு எனது பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று என்னிடம் கூறினார். முஸ்லிம்கள் என்ன செய்வார்கள் என்று எனக்கு தெரியாது என்றும் என்னிடம் கூறினார். ஆனால் இங்கு வந்து எனக்கு மிகவும் பிடித்திருந்தது. உங்களது ஜமாஅத்தைச் சார்ந்த மக்கள் ஆரம்பம் முதல் கடைசி வரை எங்களை மிகவும் கருத்தில் கொண்டார்கள்.

அடுத்து ஒரு உள்ளூர் விருந்தினர் பெண்மணி ஆவார். அஜூலன் என்ற அந்த பெண்மணி கூறுகின்றார்: உலகில் இஸ்லாத்தின் இந்த சித்திரம் காட்டப்படுவதில்லை என்பது மிகவும் வேதனையளிக்கிறது. உங்களது ஜமாஅத்தைச் சேர்ந்த மக்கள் மிகவும் கடின உழைப்பாளி ஆவர். மேலும் மிகவும் விருந்து உபசரிப்பு செய்பவர்கள் ஆவர். நான் இந்த பள்ளிவாசலை முதன் முறையாக பார்த்துள்ளேன். ஆனால் எதிர்காலத்திலும் நான் இங்கு வர விரும்புகின்றேன். ஏனெனில் உங்களது பள்ளிவாசலில் எனக்கு நிம்மதி கிடைத்துள்ளது.

அடுத்து பிரான்ஸிற்கான சுற்றுப் பயணம் இருந்தது. அங்கும் இதுபோன்ற எண்ணற்ற நல்ல தாக்கங்கள் உள்ளன. நான் ஏற்கனவே கூறியது போன்று ஒன்றிரண்டை மட்டுமே எடுத்துரைத்துள்ளேன். பிரான்ஸ் நாட்டின் சுற்றுப்பயணத்தின்போது அங்கு ஜல்ஸா ஸாலானாவும் நடைபெற்றது. அங்கும் அதேபோன்று அஹ்மதி அல்லாத முஸ்லிம்களுடனும், முஸ்லிம் அல்லாத விருந்தினர்களுடனும் சந்திப்பு நிகழ்ந்தது. அதில் சுமார் 75 விருந்தினர்கள் வருகை தந்திருந்தார்கள். அங்கு ஒரு பெண் விருந்தினர் வந்திருந்தார்.

அவர் கூறுகின்றார்: பிரான்ஸ் நாட்டில் பல்வேறு தாக்குதல்கள் நடைபெற்றன. அதை நான் வன்மையாக கண்டிக்கின்றேன் என்று கலீஃபா அவர்கள் கூறினார்கள். மேலும் இதுபோன்ற தீவிரவாத தாக்குதலுக்கும் இஸ்லாத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை

என்பதை கலீஃபா அவர்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள். இதிலிருந்து முஸ்லிம்கள் சாதாரணமாக மிக எளிமையாக மேற்கத்திய நாடுகளில் குடிபெயர முடியும் என்பது தெரிய வருகின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் தனது சொற்பொழிவில் இஸ்லாத்தின் மிக அழகிய தோற்றத்தை எடுத்துரைத்தார்கள். இதிலிருந்து இங்கு மேற்கத்திய உலகில் இஸ்லாம் பரவ இயலும் என்பதும் தெரிய வருகின்றது. மேற்கத்திய உலகில் இஸ்லாத்திற்கு எந்த இடமும் இல்லை என்று கூறுவது தவறாகும். முஸ்லிம்கள் இங்கு ஒன்றிணைந்து வாழ முடியும். எனவே எதிரிகளின் கூற்று தவறாகும் என்று அந்தப் பெண்மணி கூறுகின்றார். அதுபோன்று மக்கள் இன்று கலீஃபாவின் இந்த சொற்பொழிவைக் கேட்டிருக்க வேண்டும் என்றும் அந்த பெண்மணி கூறுகின்றார்.

அடுத்து முர்தஸா சாஹிப் என்ற நபர் ஈரான் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த விருந்தினர் ஆவார். அவர் அஹ்மதி அல்லாத முஸ்லிம் ஆவார்.

அவர் கூறுகின்றார்: இன்று எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத் மற்றும் கலீஃபா அவர்களின் அந்தஸ்தைப் பற்றி முதல் முறையாக தெரிய வந்தது. மக்கள் இஸ்லாத்திற்கெதிராக பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அத்தகைய மக்களுக்கு உங்களது கலீஃபா மிகச் சரியான பதில் தந்துள்ளார்கள். முஸ்லிம்களின் நிலை எவ்வாறிருக்கின்றது என்றால் அவர்களுக்கு தங்களின் கொள்கைகள் மற்றும் ஈமானைப் பற்றி அறிவு இல்லை. அவர்கள் உங்களது கலீஃபாவிடமிருந்து இஸ்லாத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறுகின்றார்.

அசல் விஷயம் என்னவென்றால், காலத்தின் இமாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியுடன் இணைந்திருப்பதன் மூலமாகத்தான் இஸ்லாத்தைப் பற்றி உண்மையான விஷயங்களையும், இஸ்லாத்தின் போதனைகளையும் அறிய முடியும். முஸ்லிம்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பைஅத்தில் வர வேண்டும் என்பதை அறியாதவர்களாக இருக்கின்றனர். இதை அவர்கள் புரிந்து கொள்ளாதவரை இஸ்லாத்தைப் பற்றி மிகச் சரியான மற்றும் உண்மையான அறிவு அவர்களுக்கு கிடைக்க முடியாது.

எவ்வாறிருப்பினும் அவர் கூறுகின்றார்: ஜிஹாது என்பது உண்மையில் என்ன என்பதை கலீஃபா அவர்கள் இன்று தெளிவுபடுத்தி விட்டார்கள். எவ்வாறு அதைப் பற்றிய தவறான விளக்கங்கள் செய்யப்படுகின்றன என்பதையும் கலீஃபா அவர்கள் சொற்பொழிவில் கூறி விட்டார்கள். கலீஃபா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப கட்டத்தில் எதிர்கொண்ட பிரச்சனைகளையும் எடுத்துக் கூறினார்கள்.

அடுத்து மராகஸ் நாட்டைச் சார்ந்த அஹ்மதி அல்லாத ஒரு விருந்தினர் அவர் பெயர் சுஃப்யான் சாஹிப் ஆகும். அவர் கூறுகின்றார்: இன்றைய நிகழ்ச்சியின் மூலமாக எனக்கு ஒரு விஷயம் தெளிவாகி விட்டது. அது என்னவென்றால், நீங்கள்தான் உண்மையான மற்றும் அசல் முஸ்லிம்கள் ஆவீர்கள். நீங்கள் முஸ்லிம்கள் இல்லை என்று எவர்கள் கூறுகின்றார்களோ அவர்கள் கூறுவது தவறாகும். சிறு வயது முதல் மவ்லவிகளிடமிருந்து அஹ்மதிகளைக் குறித்து நான் கற்றுக் கொண்ட அனைத்தும் பொய்யானதாகும்.

ஆனால் பிரான்ஸில் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களைக் குறித்து மக்கள் அஞ்சுகின்றனர். நாங்கள் எவ்வாறு அதனை எதிர்கொள்ள வேண்டும் என்று அறியாதவர்களாக நாங்கள் இருந்தோம். எவ்வாறு அவர்களின் அச்சத்தையும் சந்தேகத்தையும் நீக்குவது என்பதை நாங்கள் தெரியாதவர்களாக இருந்தோம். இன்று உங்களது கலீஃபா அவர்கள் மிக அழகிய முறையில் இஸ்லாத்தை தற்காத்துள்ளார்கள். நான் ஏற்கெனவே கூறியதுபோன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தின்கீழ் வந்து விடுவதன் மூலமாகவே உண்மையான இஸ்லாமிய போதனைகள் தெரிய வரும்.

ஒரு கிறிஸ்தவ நண்பர் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு உலகில் மிக அதிக தேவை உள்ளது. பல்வேறு சமுதாயங்கள் மற்றும் மார்க்கங்களுக்கு மத்தியில் இருக்கின்ற விரிசலை உங்களது கலீஃபா அவர்கள் குறைத்துக் கொண்டிருக்கின்றார்கள். தீவிரவாதிகளுக்கு அரசியல் நோக்கங்கள் இருக்கின்றன என்றும், மார்க்கம் ஒரு நல்ல விஷயம், மார்க்கத்தைக் கண்டு அஞ்சத் தேவையில் என்றும் கலீஃபா அவர்கள் நமக்கு புரிய வைத்துள்ளார்கள். கலீஃபா அவர்கள் மீண்டும் மீண்டும் மார்க்க சுதந்திரத்தைப் பற்றிப் பேசினார்கள். இது பிரான்ஸ் நாட்டு மக்களுக்கு ஒரு புதிய விஷயமாகும். பிரான்ஸ் நாட்டு மக்களுக்கு இஸ்லாத்தைக் குறித்து முற்றிலும் மாற்றமான சிந்தனையே உள்ளது.

அடுத்து ஒரு விருந்தினர் அவர் கூறுகின்றார்: இன்று எனது வாழ்நாளில் எனக்கு மிகவும் பிடித்தமான நாளாகும். இந்நாளில் உங்களது கலீஃபாவின் சொற்பொழிவை நான் நேரடியாக செவியேற்றுள்ளேன். தற்போது நாம் வெறுப்புணர்வு பரவிக் கிடக்கின்ற ஒரு இருள் சூழ்ந்த காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம் என்று கலீஃபா அவர்கள் மிகச் சரியாக கூறியுள்ளார்கள்.

ஆனால் இவை அனைத்தும் மார்க்கத்தின் காரணமாக ஏற்படவில்லை என்பதையும், மக்கள் இஸ்லாத்தைக் கண்டு அஞ்சத் தேவையில்லை என்பதையும் நமக்கு புரிய வைத்து விட்டார்கள். தீவிரவாத மக்கள் மார்க்கத்தை கடத்தி விட்டார்கள். மேலும் அதனை தனது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றார்கள் என்று கலீஃபா அவர்கள் கூறியது முற்றிலும் உண்மையாகும். நான் அந்த கருத்தை ஆமோதிக்கின்றேன்.

தொடர்ந்து அவர் கூறுகின்றார்: நாம் எதிர்கால சந்ததிகளுக்கு உலகத்தை விட்டுவிட்டுச் செல்ல முடியும் என்பதையும் இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் அவர்கள் நமக்கு புரிய வைத்து விட்டார்கள். நாம் இந்த சொற்பொழிவை அச்சிட்டு வெளியிட வேண்டும். இது அனைவருக்கும் கிடைக்க வேண்டும். (இவர் டிங்டேங்கின் ஒரு உறுப்பினர் ஆவார். இது அவரின் கருத்தாகும்)

அடுத்து நான் ஏற்கனவே கூறியது போன்று அக்டோபர் 8 ஆம் தேதி அன்று UNESCO வில் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் 91 நபர்கள் கலந்து கொண்டனர். அதில் UNESCO விற்கான மாலி நாட்டு தூதர், பிரான்ஸ் நாட்டு வெளியுறவுத்துறை மற்றும் உள்நாட்டுத்துறை அதிகாரிகள், மார்க்க விவகார ஆலோசகர், பிரான்ஸ் நாட்டின் மார்க்க விவகாரத் துறையின் ஆலோசகர் மேலும் மார்க்கத்துறையின் டைரக்டர், நேட்டோ மெமோரியல் அமைப்பின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர், கவுன்ஸிலர்கள், மேயர்கள் மற்றும் பல்வேறு அரசாங்க துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

UNESCO விற்கான மாலி நாட்டு தூதர் உமர் கைது சாஹிப் தனது எண்ணத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: ஜமாஅத்தின் இமாம் அமைதியை பரப்புகின்றார்கள். நான் உங்களது அமைதியின் தூதுச் செய்தியின் காரணமாக உங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். UNESCO எப்படிப்பட்ட ஒரு முன்மாதிரியான இடம் என்றால், இங்கு அமைதியைக் குறித்து பேச முடியும்.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

மேலும் தனது இதர உணர்வுகளையும் அவர் வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: இந்த சொற்பொழிவின் மூலமாக எவ்வாறு தமக்கு அதிகமான விஷயங்கள் தெரிய வந்தன என்பதையும் அவர் கூறுகின்றார். இன்று முஸ்லிம் சமுதாயத்திற்கு இதற்கான தேவையே உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். அவர் முஸ்லிம் கிடையாது. மாலி நாட்டில் வசிக்கக் கூடியவர் ஆவார்.

அவர் கூறுகின்றார்: முஸ்லிம் சமுதாயத்திற்கான தேவை இன்று உள்ளது. உலகலாவிய நீதி மற்றும் சமத்துவத்தைப் பற்றிய சிந்தனையை ஜமாஅத்தின் இமாம் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். உலகிற்கு இன்று இதற்கான தேவை மிக அதிகமாக உள்ளது.

அடுத்து நேட்டோ மெமோரியல் அமைப்பின் தலைவர் மிஸ்டர் பிராண்ட்டன் கூறுகின்றார்: இதில் கலந்து கொண்டு நான் மகிழ்ச்சியை உணர்கின்றேன். இந்த கூட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததும், வரலாற்று சிறப்பு கொண்டதும் ஆகும். இதன் மூலம் அமைதியும், சகிப்புத்தன்மையும், சகோதரத்துவமும் நிலைபெற முடியும். ஜமாஅத்தின் இமாமின் இந்த தூதுச் செய்தியை அதிக அதிகமான மக்கள் கேட்க வேண்டும் என்பது எனது ஆசையாகும்.

மேலும் அவர் கூறுகின்றார்: அமைதி நிறைந்த சகிப்புத்தன்மை உடைய போதனையை நல்கக்கூடிய உண்மையான இஸ்லாத்தைப் பற்றி கலீஃபா அவர்கள் கூறுகின்றார்கள். இந்த தூதுச் செய்தி தீவிரவாதிகளின் செயல்களுக்கு நேர் எதிரானதாகும். ஜமாஅத்தின் இமாம் அவர்கள் அமைதியின் தூதுச் செய்தியை பரப்புவதற்கு மிக அதிகமாக முயற்சி செய்து வருகின்றார்கள். அமைதியை வளர்ப்பது என்பது மிக முக்கிய பணியாகும். அதில் நாமும் உதவி செய்ய ஆயத்தமாக இருக்கின்றோம். நம்மில் ஒவ்வொருவரும் அமைதியை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அந்தப் பணியை எல்லா மட்டத்திலும் செய்ய வேண்டும். மேலும் அதற்காக நாம் நமது செயல் முன்மாதிரியையும் வெளிப்படுத்த வேண்டும்.

அடுத்து பிரான்ஸ் நாட்டில் மாலி நாட்டுடன் தொடர்புடைய கத்தோலிக்க நபர்களின் கூட்டமைப்பின் தலைவரான தியாலு சாஹிப் அவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார்கள்.

அவர் கூறுகின்றார்: நான் ஏற்கனவே அஹ்மதிகளைக் குறித்து அறிந்திருந்தேன். இன்று நமக்கு கிடைத்த இந்த தூதுச் செய்தியை அனைத்து மார்க்கங்களும் மற்றவர்களுக்கு எட்டச் செய்ய வேண்டும். இந்த சொற்பொழிவை செவிமடுத்து இது எவ்வளவு அன்பிற்குரிய தூதுச் செய்தியாகும் என்பதை நான் உணர்ந்தேன். மேலும் எனது உள்ளத்தில் எந்த அளவிற்கு அதற்காக ஆசை உருவானது என்றால் நான் இந்த சொற்பொழிவைக் கேட்ட பிறகு இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கான பிரார்த்தனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

இவர் கத்தோலிக்க கிறிஸ்தவர் ஆவார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் எடுத்துரைத்த இஸ்லாம் உலகில் நிலைபெற்று விட்டால் பின்னர் உலகின் ஏனைய அனைத்து விவகாரங்களும் தானாகவே அழிந்து விடும். பிறரின் உணர்வுகள் மதிக்கப்படுகின்றபோது எல்லா இடத்திலும் அமைதி நிலைபெற்று விடும். ஒருவர் மற்றவரை மதிப்பதற்கான பெரும் அவசியம் உள்ளது. நம்மில் ஒவ்வொருவரும் தத்தமது மார்க்கத்தில் நிலைபெற்றுள்ளோம். ஆனால் நம் அனைவரது ஒன்றுபட்ட கொள்கை அல்லாஹ்வின் இருப்பாகும்.

அடுத்து ஒரு விருந்தினர் பிரர்னர்ட் சாஹிப் கூறுகின்றார்: நாம் டிவிகளில் இஸ்லாத்தைக் குறித்து எந்த பொய்ப் பிரச்சாரத்தை கேட்டு வந்தோமோ அதற்கு நேர்மாற்றமான இஸ்லாமிய போதனைகள் எடுத்துரைக்கப்பட்டன. இதுவே உண்மை இஸ்லாம் ஆகும்.

அவர் கூறுகின்றார்: இன்று நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி சரியான ஞானத்தைப் பெற்றுக் கொண்டுள்ளேன். அன்னார் மதீனாவில் எவ்வளவு உயர் தரமான சமூகத்தை நிலைநாட்டினார்கள் என்பதையும் அறிந்து கொண்டேன். கல்வித் துறையில் இவ்வளவு முக்கிய பங்களிப்பை இஸ்லாம் ஆற்றியிருக்கின்றது என்பதையும், உலகத்திற்கு இஸ்லாம் கல்வியை வழங்கியுள்ளது என்பதையும் முதல் முறையாக நான் தெரிந்து கொண்டேன்.

அடுத்து பிரான்ஸ் நாட்டின் மனித உரிமை ஃபெடரேஷனின் ஒரு நபர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார். அவர் கூறுகின்றார்: இந்த சொற்பொழிவு மிகவும் சிறப்பானதாகவும், ஆழமானதாகவும் இருந்தது. மிக விளக்கமாக கல்வியின் தேவை குறித்தும், அறிவை வளர்ப்பது தொடர்பான நடவடிக்கைகளைப் பற்றி பேசப்பட்டது. கல்வியின் வரலாற்றில் இஸ்லாத்தின் தொண்டுகளும் பேசப்பட்டன. இவை அனைத்தும் மிக விருப்பமான தகவல்களாகும்.

அடுத்து பிரான்ஸின் நகர கவுன்ஸின் ஒரு உறுப்பினர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார். அவர் கூறுகின்றார்: நான் பல்வேறு இனங்களுக்கு மத்தியில் வேறுபாட்டை உருவாக்குகின்ற விஷயங்களுக்கு எதிராக பணி செய்யக்கூடிய துறையின் இன்சார்ஜ் ஆவேன். இன்று நான் உங்களது சொற்பொழிவைக் கேட்டேன். அதில் குறிப்பாக நீங்கள் பெண்களுக்கு கல்வியில் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று கூறினீர்கள்.

மேலும் அவர் கூறுகின்றார்: நீங்கள் மார்க்கங்களுக்கு மத்தியில் ஒற்றுமையைக் குறித்து பேசினீர்கள். இது மிகவும் அவசியமாகும். ஆப்ரிக்காவின் தொலைதூரப் பகுதிகளில் கல்வி மற்றும் மருத்துவ ரீதியில் ஜமாஅத் ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். பொதுவாக பிரான்ஸ் மற்றும் இதர பகுதிகளில் இஸ்லாத்தைப் பற்றி பேசப்படும்போது பல்வேறு தரப்பட்ட அச்சங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. சமூகத்தில் இஸ்லாமிய எதிர்ப்பு சிந்தனை என்பது காணப்படுகிறது.

அதுபோன்ற சூழலில் கலீஃபா அவர்களின் சொற்பொழிவு மூலமாக இஸ்லாத்தைக் குறித்து நேர்மறையான விஷயங்களைக் கேட்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனால் எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இங்கு வந்து உங்களது ஜமாஅத் எப்படிப்பட்டது என்பதை நான் பார்க்க விரும்பினேன். மேலும் நீங்கள் எப்படி பணி செய்கின்றீர்கள் என்பதையும் பார்க்க விரும்பினேன். நான் மேலும் உங்களைப் பற்றி அதிகமாக விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் நான் விரும்பினேன். ஆக இன்று எனது அந்த ஆசை நிறைவேறியது.

இன்னொரு விருந்தினர் அலெக்ஸாண்டர் என்பவர் கூறுகின்றார்: கலீஃபா அமைதிக்கான தூதுச் செய்தியை வழங்கியுள்ளார்கள். இந்த சொற்பொழிவு உண்மையை உள்ளடக்கி இருந்தது. மிக தெளிவாகவும் விரிவாகவும் தாங்கள் பேசினீர்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் அடித்துவத்தின் கட்டுரையை தெளிவுபடுத்தி விட்டதாக நான் உணர்கின்றேன். இந்த தூதுச் செய்தி மிகவும் அருமையானதாகும். முஸ்லிம்களில் ஒரு சிறிய ஜமாஅத்தான அஹ்மதிகள்தான் இந்த தூதச் செய்தியை எடுத்துரைத்துள்ளார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எவரேனும் நம்பிக்கை கொண்ட ஒருவனை வேண்டுமென்றே கொலை செய்து விட்டால், அவனுக்குரிய தண்டனை நரகமேயாகும். அவன் அதில் நெடுங்காலம் தங்கிவிடுவான். அல்லாஹ் அவனிடத்துக் கோபங்கொண்டு அவனைச் சபித்து விடுவான். மேலும் அவனுக்கு மாபெரும் ஆக்கினையும் ஏற்பாடு செய்துள்ளான். **(4:94)**

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

அடுத்து ஒரு பத்திரிகையாளர் அவர் ஒரு பெண்மணி ஆவார். அவர் கூறுகின்றார்: சொற்பொழிவைக் கேட்டேன். மிக நல்ல சொற்பொழிவாக இருந்தது. குறிப்பாக உலகில் இஸ்லாம் எந்த அளவிற்கு கல்வியில் முன்னேறியுள்ளது என்பதை அறிந்து எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டுள்ளது. அதில் முஸ்லிம்களின் பங்களிப்பு எவ்வளவு உள்ளது என்பதையும் அறிந்து கொண்டேன். அதற்காக உதாரணங்களை நீங்கள் உங்களது சொற்பொழிவில் வழங்கினீர்கள். திருக்குர்ஆனின் உதாரணங்களையும் வழங்கினீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு அமைதி நிறைந்த சமூகத்தை நிலைநாட்டினார்கள் என்பதற்கான உதாரணத்தையும் நீங்கள் வழங்கினீர்கள். நான் இங்கு வந்து நிறைய கற்றுக் கொண்டேன் என்று அந்தப் பெண்மணி கூறுகின்றார்.

ஒரு சேரிட்டி அமைப்பில் பணி செய்யக்கூடிய விருந்தினர் ஒருவர் கூறுகின்றார்: இதுவொரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக இருந்தது. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தூதுச் செய்தியாக இருந்தது. ஒரு வரலாற்று சிறப்புமிக்க தூதுச் செய்தியாக இருந்தது. இது முழு உலகமும் கேட்க வேண்டிய தூதுச் செய்தியாகும். இந்த சொற்பொழிவின் மூலம் எனது அறிவு வளர்ந்துள்ளது. எனக்கு அமைதியின் அசல் நிலையும், அதன் முக்கியத்துவத்தைப் பற்றிய கணிப்பும் எனக்கு கிடைத்துள்ளது.

அடுத்து ஸ்ட்ராஸ்பெர்க்கில் பள்ளி திறப்பு விழா நடைபெற்றது. அது ஜெர்மனியின் எல்லையிலுள்ள பிரான்ஸின் மற்றொரு நகரமாகும். அங்கு சுமார் 191 விருந்திர்கள் கலந்து கொண்டார்கள். அந்த விருந்தினர்களில் அந்த பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்களும், மேயர்களும், பல்வேறு மார்க்கத்தைச் சார்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். பல்வேறு அமைப்புகளின் தலைவர்களும், வாழ்க்கையின் பல்வேறு துறையுடன் தொடர்புடைய முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். அக்கம் பக்கத்திலுள்ள சிறிய நகரத்தைச் சார்ந்த நபர்களும் வருகை தந்திருந்தார்கள்.

ஏனென்றால் அந்த மக்களுக்கு மத்தியில் இஸ்லாத்திற்கு எதிரான சிந்தனைகளும் மற்றும் அச்சங்களும் இன்னும் சொல்வதென்றால் வெறுப்பும் காணப்படுகிறது. ஆனால் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிறகு அவர்களுக்கு ஏற்பட்ட தாக்கம் முற்றிலும் நேர்மாற்றமாக இருந்தது.

பிரான்ஸ் நாட்டின் பாராளுமான்ற உறுப்பினராகிய மார்ட்டின் சாஹிப் கூறுகின்றார்: தாங்கள் ஒரு முழுமையான தூதுச் செய்தியை வழங்கியுள்ளீர்கள். அது அமைதிக்கான தூதுச் செய்தியாகவும், சகோதரத்துவத்திற்கான தூதுச் செய்தியாகவும் உள்ளது. இது முழு உலகத்திற்குமான தூதுச் செய்தியாகும். அஹ்மதிகள் மிகவும் சுறுசுறுப்பானவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் சாதனை படைத்துக் காட்ட விரும்புகின்றார்கள். அவர்களின் மோட்டோ அவர்களின் செயல்களின் மூலமாகவே வெளிப்படுகிறது.

மேலும் அந்த பாராளுமன்ற உறுப்பினர் கூறுகின்றார்: உங்களுக்கு அருகில் மிகக் குறைவான நபர்கள் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் நான் உங்களிடம் மீண்டும் வருவேன். ஏனென்றால் அப்போதுதான் உங்களுடன் திருப்திகரமாக அமர்ந்து பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். மேலும் உங்களது நடவடிக்கைகளைக் குறித்து என்னால் மேலும் சிறந்த முறையில் அதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். அது எமது சமூகத்திற்கும், எமது முன்னேற்றத்திற்கும் மிக அவசியமாகும்.

தொடர்ந்து அந்த பெண் பாராளுமன்ற உறுப்பினர் கூறுகின்றார்: உங்களது கலீஃபா அமைதி பற்றி பேசியுள்ளார்கள். சகிப்புத்தன்மை பற்றி பேசினார்கள். பிரான்ஸ் நாட்டிற்கும், பிரான்ஸ் நாட்டின் குடிமக்களுக்கும் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தூதுச் செய்தியாகும். ஊடகங்கள் மூலமாக நாம் அறிந்துள்ள இஸ்லாம் மாறுபட்ட ஒன்றாகும் என்பதை பிரான்ஸ் நாட்டு மக்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். நாம் உண்மையான இஸ்லாத்தை அறிந்து கொள்வது அவசியமாகும்.

அடுத்து கவுன்ஸில் ஆஃப் பேரீனில் ஒரு துறையின் துணைத் தலைவர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார். அவர் கூறுகின்றார்: எங்களது பகுதியில் திபெத் நாட்டுடன் தொடர்புடைய புத்த மதத்தின் ஐரோப்பிய சென்டர் உள்ளது. நான் மார்க்கங்களைப் பற்றி அறிந்துள்ளேன். கிறிஸ்தவம், யூத மதம், புத்த மதம் போன்றவற்றின் தொண்டுகளை நான் நன்கு அறிவேன். ஆனால் நான் இன்று உங்களது சொற்பொழிவைக் கேட்டு மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். ஏனென்றால் அதற்கான முதல் காரணம், உங்களது சொற்களாகும்.

இரண்டாவது, உங்களது சிந்தனையாகும். அது என்னவென்றால், எல்லோரிடத்திலும் அன்பு; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்பதாகும். நீங்கள் இஸ்லாத்தின் முழுமையான சித்திரத்தை முன்னிறுத்தியுள்ளீர்கள். இன்று பொதுவாக கருதப்படும் இஸ்லாத்தைப் பற்றிய சிந்தனைகளுக்கு நேர் எதிராக உண்மையான இஸ்லாத்தின் சித்திரத்தை நீங்கள் எடுத்துரைத்துள்ளீர்கள். உங்களது சொற்களுக்கும், உங்களது சிந்தனைகளுக்கும் நிறைய ஒப்புமை உள்ளது. நீங்கள் அனைவருக்கும் உங்களது கதவை திறந்து வைப்பதை நேர்மறையாக கருதுகின்றீர்கள். இன்றைய நிகழ்ச்சியிலிருந்து நான் நிறைய கற்றுக் கொண்டுள்ளேன். இதுவே அமைதிக்கான பாதையாகும்.

அடுத்து ஸ்ட்ராஸ்பெர்க் நகரத்தின் பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்ச்சியில் கியூபா சாஹிப் என்ற ஒரு நபர் வந்திருந்தார். அவருடன் ஒரு பெண்மணியும் வந்திருந்தார். அவர் அவரது மனைவியாவார்.

அவர் கூறுகின்றார்: இன்று இந்த நிகழ்ச்சிக்கான அழைப்பை ஒப்புக் கொள்வதற்கு முன்பாக இன்டர்நெட்டில் உங்களது ஜமாஅத்தைப் பற்றிய தகவல்களை நாங்கள் சேகரித்தோம். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பணிகளை அறிந்து மன மகிழ்ச்சியுடன் அழைப்பை ஒப்புக் கொண்டோம். இங்கு மத நல்லிணக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது என்பதை அறிந்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. உங்களது சொற்பொழிவிலும் கூட மனித உரிமைகள் அதிலும் குறிப்பாக அண்டை அயலாலருக்குரிய உரிமைகள், கல்வியின் அவசியம் போன்றவற்றை நீங்கள் எடுத்துரைத்தது மிகவும் மகிழ்ச்சியளித்தது.

ஆக நமது இதுபோன்ற நிகழ்ச்சியில் மக்கள் வருகின்றனர். ஆனால் இன்டர்நெட் மூலமாக ஜமாஅத்தைக் குறித்து தகவல்களை அறிந்தே வருகின்றனர். மேலும் அங்கு அவர்களுக்கு உண்மையான இஸ்லாமிய போதனைகள் குறித்தும் நிறைய தெரிந்து விடுகின்றது.

மற்றொரு விருந்தினர் கூறுகின்றார்: எனது உணர்வுகளை எடுத்துரைப்பது என்பது என்னால் இயலாத ஒன்றாகும். இஸ்லாத்தின் இந்த அமைப்பைக் குறித்து எனக்கு இதற்கு முன்பு முற்றிலும் தெரியாது. தெருவில் சிலர் என்னை சந்தித்தார்கள். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு என்னிடம் கோரினார்கள். நான் இன்டர்நெட்டில் சில தகவல்களை அறிந்தேன். இங்கு வருவதற்கு

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வின் வழியில் பயணம் செய்யும்போது நன்றாக விசாரனை செய்யுங்கள். எவரும் உங்களுக்குச் சலாம் கூறினால் (அவரிடம்) நீர் நம்பிக்கை கொண்டவர் இல்லை என்று கூறாதீர்கள். நீங்கள் இவ்வுலக வாழ்க்கைக்கான பொருளை விரும்புகின்றீர்கள். அல்லாஹ்விடமோ சிறந்த பொருள்கள் மிகுதியாக உள்ளன. **(4:95)**

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

முடிவு செய்தேன். நான் எடுத்த முடிவு மிக நல்ல முடிவாக இருந்தது. நான் இங்கு கேட்டவற்றைக் குறித்து என்னால் பாராட்டாமல் இருக்கவே முடியாது. இஸ்லாத்தின் இந்த கிளை அமைதியை விரும்பக்கூடிய கிளையாகும். இதுதான் இஸ்லாத்தின் அசல் வடிவமாகும். இது எப்படிப்பட்ட இஸ்லாம் என்றால் இங்கு மனிதத்துவம் உள்ளது. அன்பு உள்ளது. நேசம் உள்ளது. எனக்கு கூறப்பட்ட இஸ்லாம், இஸ்லாமே அல்ல என்பதும் மேலும் அது வேறொன்றாகும் என்பதும் தற்போது எனக்கு தெரிய வந்துள்ளது. இஸ்லாத்தின் நல்லொழுக்க போதனைகள் கிறிஸ்தவத்தைப் போன்றதாகும் என்றும் எனக்கு தற்போது தெரிய வந்துள்ளது.

சில நிர்ப்பந்தத்தின் காரணமாக மக்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். உண்மை என்னவென்றால், ஏராளமான நபர்கள் தனிப்பட்ட சந்திப்புகளில் இஸ்லாத்தின் இந்த போதனைகள் கிறிஸ்தவ போதனைகளை விட மேலானது என்று கூறுகின்றனர்.

மேலும் இந்த ஜமாஅத் அசாதாரண ஜமாஅத்தாகும் என்பதும் கலீஃபாவின் சொற்பொழிவிலிருந்து எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது என்று அவர் கூறுகின்றார்.

மற்றொரு விருந்தினர் கூறுகின்றார்: இங்கு பள்ளிவாசல் கட்டப்படுகின்றது என்பதை அறிந்து எனக்கு துவக்கத்தில் நிறைய அச்சங்கள் இருந்தன. ஆனால் எல்லோரிடத்திலும் அன்பு; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்ற முழுக்கத்தை நான் உங்கள் மக்களிடமிருந்து செவியுற்ற போது, ஒருவர் இத்தனை அன்பு நிறைந்த முழுக்கத்தை முழுங்கும்போது அதனை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது இன்று எங்கணம் சாத்தியமாகும் என்ற சிந்தனை எனக்கு தோன்றியது.

அஹ்மதிய்யா ஜமாஅத் தீவிரவாதத்திற்கு எதிரான ஒரு வாளாக ஆக முடியும். மேலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பங்களிப்பையும் அதில் ஆற்ற முடியும். பிரான்ஸ் நாட்டில் இதுவரை மக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பெரியதாக அறிவில்லை. எனினும் தீவிரவாதம் மற்றும் அதற்கு எதிரான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கருத்துக்களை அவர்கள் பார்க்க வேண்டும். இதன் மூலமாக அவர்கள் ஜமாஅத்தை அறிய வேண்டும். அதற்காக அஹ்மதிகளாகிய நீங்கள் மிக அதிகமாக பணி செய்ய வேண்டும்.

அடுத்து லூக்கேன் சாஹிப் இவர் ஒரு நகரத்தின் மேயராக இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: நான் முதல் முறையாக பள்ளிவாசலுக்கு வந்துள்ளேன். பள்ளிவாசலுக்கு வருவது இதுதான் என்றால் நான் இன்று கண்ட இந்த விஷயம்தாம் பள்ளிவாசலுக்கு வருகை தருவது என்றால், நான் தினந்தோறும் பள்ளிவாசலுக்கு வருவேன். எனக்கு பள்ளிவாசலுக்கு வருவது மிகவும் பிடித்துள்ளது. எனக்கு இங்கு நிம்மதி கிடைத்துள்ளது. அதனை என்னால் எடுத்துரைக்க முடியாது.

அடுத்து அங்கிருந்து நாங்கள் ஜெர்மனி சென்றோம். அக்டோபர் 14 ஆம் தேதி அங்கு பள்ளிவாசல் வீஸன் பாடன் என்ற ஊரில் பள்ளிவாசல் திறப்பு விழா நடந்தது. அங்கு மிகவும் பிரபல்யமான ஹால் ஒன்று உள்ளது. அங்குதான் பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. ஏனென்றால், பள்ளிவாசலில் அதற்கு போதுமான இடம் இல்லாமல் இருந்தது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விருந்தினர்களின் எண்ணிக்கை 370 ஆக இருந்தது. லார்டு மேயர் போன்றோர்கள் வருகை தந்திருந்தார்கள். மாநில சட்டசபையின் உறுப்பினர்களும் பல்வேறு அமைச்சக துறையின் அரசாங்க பிரதிநிதிகளும் வருகை தந்திருந்தார்கள். பல்வேறு துறையின் டைரக்டர்களும், காவல்துறை அதிகாரிகளும், சர்ச்சின் பாதிகளும், பேராசிரியர்களும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார்கள். மருத்துவர்கள், வக்கீல்கள் என பல்வேறு துறையைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

கத்தோலிக்க தேவலாயத்தின் பாதிரி ஒருவர் கூறுகின்றார்: இந்த நிகழ்ச்சியில் நீங்கள் ஆற்றிய சொற்பொழிவு மிகவும் சிறப்பானதாகும். அனைத்து மார்க்கத்தினரின் கருத்துக்களையும் நீங்கள் வெளிப்படுத்தினீர்கள். அதனை நான் முழுமையாக ஒப்புக் கொள்கின்றேன். பிறரை நேசிப்பதும், இறைவனுக்குரிய உரிமையை வழங்குவதும் இந்த அனைத்து விவகாரங்களும் எனது மார்க்க போதனைகளிலும் இடம் பெற்றுள்ளன. இன்று வரை நான் இஸ்லாத்தின் இறைவனைக் குறித்து விரிவான, ஆழமான விஷயங்களை செவிமடுத்ததில்லை.

இஸ்லாத்தின் இறைவன் முழுமையான ஏகத்துவத்தை கொண்டிருப்பதாக வாதம் செய்யக்கூடியவன் ஆவான். இந்த ஒற்றுமையின் மூலமாக மட்டுமே அனைத்து மார்க்கங்கள் மற்றும் சமூகங்களை ஒன்றிணைக்க முடியும். இந்த செய்தியை எட்ட வைப்பதில் நாம், மார்க்கம் மற்றும் இனம் போன்றவற்றிற்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டும். உலகத் தலைவர்களுக்கு இந்த சொற்பொழிவு புரிந்தால் ஓரளவு நன்றாக இருக்கும். அமைதியைப் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டால் அது சிறந்ததாக இருக்கும். நான் இனி அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் தொடர்பில் இருக்க விரும்புகின்றேன். நான் பள்ளிவாசலை பார்ப்பதற்கும் நிச்சயம் வருவேன்.

இஸ்லாத்தின் இறைவன் வேறு. கிறிஸ்தவத்தின் இறைவன் வேறு என்று அவராகவே ஒரு கருத்தை உருவாக்கிக் கொண்டுள்ளார். அவருக்கு உண்மை தெளிவுபடுத்தப்பட்ட போது குறைந்தபட்சம் அதனை ஒப்புக் கொள்வதற்கு அவர் நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளார்.

அடுத்து நாயின்ஸ் நகரத்தின் ஒரு தேவாலயத்தின் பிரதிநிதி கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்: அண்டை அயலாலர்களின் உரிமைகள் பற்றி இஸ்லாமிய போதனைகளின் விளக்கத்துடன் தாங்கள் எடுத்துரைத்தீர்கள். இது எனக்கு மிகவும் புதுமையான மற்றும் விருப்பத்திற்குரிய ஒன்றாக இருந்தது. நான் ஒரு மார்க்கத் தலைவரிடமிருந்து அண்டை அயலாலருக்குரிய உரிமை பற்றி இந்த அளவுக்கு வழியுறுத்திக் கூறப்பட்ட கருத்தை முதல் முறையாக செவியுற்றேன்.

லாஃபரம் என்ற நகரத்திலிருந்து ஒரு வக்கீல் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சிந்தனை மிக பரந்ததாகும். அதன் மூலம் எனது அலுவலகம் முன்பும் ஆச்சரியமடைந்து வந்தது. ஆனால் இன்று அண்டை அயலாரின் உரிமைகளைத் தாங்கள் எடுத்துரைத்தீர்கள். மேலும் அண்டை அயலாரின் விளக்கத்தையும் தாங்கள் எடுத்துக் கூறினீர்கள். ஒரு பெரும் நகரமே இந்த விளக்கத்திற்கு அடங்கி விடுகிறது. இதன் மூலம் எமது ஆச்சரியம் இன்னும் அதிகரித்து விடுகின்றது. இதேபோன்று நகரத்து வாசிகளுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அனுதாபம் மற்றும் நன்மைக்கான வட்டம் தற்போது மிகவும் பரந்ததாக ஆகி விட்டது.

மற்றொரு விருந்தினர் சூஸீன் சாஹிபா அவர் ஒரு ஆசிரியை ஆவார். அவர் கூறுகின்றார்: எனக்கு இந்த சொற்களில் மிகவும் பிடித்த ஒரு விஷயம் என்னவென்றால், மனிதர்களாகிய நம் அனைவரையும் படைத்தவன் ஒருவனே ஆவான் என்ற கூற்றும், நாம்

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் வழியில் இடம் பெயர்ந்து செல்பவர் பூமியில் மிகுதியான அடைக்கலமும், பொருள் வளமும் காண்பார். ஒருவர் அல்லாஹ்வுக்காகவும், அவனுடைய தூதருக்காகவும் இடம் பெயர்ந்தவராய் தமது வீட்டிலிருந்து வெளியேறியப் பின்னர் மரணமடைந்தால் நிச்சயமாக அவருக்குரிய நற்பலன் அல்லாஹ்விடமுள்ளது. (4:101)

Faizal Hameed Ilahi, Tittacherry

அனைவரும் ஒரே இறைவனையே நம்பிக்கை கொண்டிருக்கின்றோம் என்ற கூற்றும் ஆகும். இந்த விஷயத்தை நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஊனீ சாஹிபா என்ற மற்றொரு பெண்மணி அவர் டைகிரோன் கட்சியை சார்ந்தவர் ஆவார். அவர் கூறுகின்றார்: இந்த சொற்பொழிவை மிகவும் ஊக்கமளிக்கக் கூடியதாக நான் உணர்ந்தேன். அதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயம் உள்ளது. அதனை ஒருபோதும் நான் மறக்க மாட்டேன். அது என்னவென்றால், அஹ்மதிகள் தத்தமது சமூகத்தில் பிறருக்கு நன்மை பயக்கக் கூடியவர்களாக ஆக வேண்டும் என்பதாகும். இந்த விஷயத்தின்படி அஹ்மதிகள் மட்டுமல்ல அனைவருமே செயலாற்ற வேண்டும். அனைத்து முஸ்லிம் பிரிவுகளும் அஹ்மதிகளாகிய உங்களைப் போன்று திறந்த மனம் படைத்தவர்களாக ஆகிவிட்டால் நமக்கிடையில் ஒன்றிணைந்து வாழ்வது என்பது மிக எளிதாகி விடும்.

இங்கு ஒன்றை நான் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகின்றேன். நிச்சயமாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து இருக்க வேண்டும். எனவே தனது போதனைக்குள் இருந்து கொண்டு நீங்கள் பேச வேண்டும். அதே நல்லொழுக்க வட்டத்திற்குள் இருந்து கொண்டு மிக எளிதாக போதனைகளை எடுத்துரைக்க முடியும். எனவே அச்சப்படுவதற்கான அவசியம் இல்லை. எனவே உயர் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்தியவாறு இஸ்லாமிய போதனையை தெளிவுபடுத்த வேண்டும். எவ்வாறிருப்பினும் இப்போது நான் அடுத்த விருந்தினரைப் பற்றி குறிப்பிடுகின்றேன்.

இந்த விருந்தினர் ஒரு பள்ளிக் கூடத்தின் ஆசிரியராக இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: எனக்கு இங்கு முதல் முறையாக ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் ஏற்பட்டுள்ளது. மிக நல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மத நல்லிணக்கத்தின் மீது அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். மற்ற மார்க்கத்தைச் சார்ந்த மக்கள் மீதும் மேலும் அதே போன்று அனைத்து மனிதர்களுடனும் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற கலீஃபாவின் கூற்று எனக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக தோன்றுகிறது.

இன்றைய சமுதாயத்தில் இந்த விஷயம் மிகவும் குறைந்து விட்டது. மற்ற மார்க்கங்கள் இதனை மறந்து வருகின்றன. ஆனால் நீங்கள் இதற்கு முக்கியத்துவம் வழங்குகின்றீர்கள். இனி நான் உங்களது பள்ளிவாசலுக்கு கண்டிப்பாகச் செல்வேன். எனது உள்ளத்தில் எழுந்துள்ள அனைத்து கேள்விகளையும் கேட்டு தெளிவு பெற உள்ளேன்.

அடுத்து ஒரு உள்ளூர் மருத்துவமனையின் மருத்துவர் கூறுகின்றார்: மார்க்க அளவில் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவிலிருந்து கிடைத்த போதனைகள் வெளிப்பட்டு விட்டால் பின்னர் சமூகத்தில் மனிதத்துவத்தின் முக்கியத்துவம், மனிதத்துவத்தின் மாண்பு நிலைநாட்டப்படும். தேவாலயங்களும் இந்த கருத்தை பொதுவானதாக ஆக்க வேண்டும். தேவாலயங்கள் பல்வேறு கேள்விகளிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டுள்ளன. அவர் கிறித்தவர் ஆவார். இருந்தபோதிலும் தேவாலயங்கள் பல்வேறு கேள்விகளிலிருந்து கண்ணை மூடிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் ஒவ்வொரு கேள்விகளையும், ஆட்சேபணைகளையும் எடுத்து வைத்து அதற்கு பல்வேறு கோணங்களில் பதிலளித்துள்ளார்கள். அச்சமின்றி இஸ்லாத்தின் கருத்துக்களை விளக்கியுள்ளார்கள். மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்னவென்றால், கலீஃபாவின் ஒவ்வொரு விளக்கமும் கூற்றும் மனித சமூகத்தை அமைதி, சமாதானம் மற்றும் நேசத்தின்பால் அழைத்துச் செல்லக்கூடியதாக உள்ளது.

மற்றுமொரு பெண் விருந்தினர் ஹைக் பராதர் சாஹிபா கூறுகின்றார்: முழு உலகத்திற்கும் ஒரு இறைவன் ஆவான். அவன் ரப்புல் ஆலமீன் ஆவான் என்று நீங்கள் கூறினீர்கள். இது இறைவனைப் பற்றிய ஒரு பரந்துபட்ட சிந்தனையாகும். மேலும் எனக்கு அது ஆர்வத்திற்குரிய காரணியாகவும் ஆகியுள்ளது. இறைவன் ஏகனாக இருந்தபோதும் அனைத்து மதங்களையும், சமுதாயங்களையும் சார்ந்த மனிதர்களின் இறைவன் எந்த வித்தியாசமுமின்றி மனிதனை பராமரிக்கின்றான் என்ற கருத்து எனக்கு மிகவும் ஆச்சரியத்திற்குள்ளாக்கி உள்ளது.

சிந்திக்கக்கூடிய ஒவ்வொருவரும், அறிவுடையவரும் ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்வதை தவிர்த்து வேறு வழியில்லை. ஏக இறைவனை ஒப்புக் கொள்வது அவசியமாகும். அவன் அனைத்து ஆற்றல்களுக்கும் அதிபதி ஆவான். ஏகத்துவத்தின் இந்த தூதுச் செய்தியை அனைவருக்கும் சென்றடையச் செய்வது ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பாகும்.

பாபர் சாஹிபா என்ற ஒரு பெண்மணி கூறுகின்றார்: இதுபோன்ற ஒரு அருளுக்குரிய சபையில் நான் கலந்து கொண்டிருப்பது எனக்கு மிகவும் கௌரவத்திற்குரிய ஒன்றாகும். எனது உள்ளத்திலிருந்த அச்சம் மற்றும் தவறான புரிதல்களை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் தனது தெளிவான கூற்றினாலும் இஸ்லாமிய போதனைகளின் உண்மையான விளக்கத்தின் மூலமாகவும் நீக்கி விட்டார்கள். இப்போது எனக்கு ஏராளமான விஷயங்கள் தெளிவாகி விட்டன.

அடுத்து ஒரு விருந்தினர் கூறுகின்றார்: அமைதியை நிலைநாட்டுவதற்கு மிக முக்கியமான ஒரு விஷயம் சொற்பொழிவில் கூறப்பட்டது. அது என்னவென்றால், ஒருவர் மற்றவரின் உணர்வுகளை கருத்தில் கொள்ள வேண்டும். இஸ்லாத்தில் பல்வேறு பிரிவுகள் உள்ளன என்பதை நான் அறிந்திருந்தேன். ஆனால் அமைதியை விரும்பக்கூடிய இப்படிப்பட்ட ஜமாஅத் இருப்பதை நான் ஒருபோதும் அறிந்ததில்லை.

அடுத்து முஹ்தாரி சாஹிப் என்ற ஒரு விருந்தினர் வந்திருந்தார். அவர் வேஸ் பாதல் நகரத்தின் காவல்துறையில் பணியாற்றுகின்றார். அவர் கூறுகின்றார்: முஸ்லிம்கள் தங்களது மற்றொரு சித்திரத்தை காட்ட விரும்புகின்றார்கள். அதாவது இஸ்லாம் உண்மையில் அமைதியை விரும்பக்கூடிய மார்க்கமாகும் என்பது இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெளிவடைந்துள்ளது. கலீஃபா அவர்கள் ஆப்ரிக்காவையும், பல்வேறு நல்ல திட்டங்கள் ஜமாஅத் சார்பாக செயல்படுத்தப்படுவதையும் கூறியிருந்தார்கள். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

அடுத்து ஃபல்டாவில் பைத்துல் ஹமீது பள்ளிவாசல் திறப்பு விழா நடந்தது. அந்த நிகழ்ச்சியில் 330 விருந்தினர்கள் கலந்து கொண்டார்கள். மேலும் அங்கு லார்டு மேயர் அவர்களும் வருகை தந்திருந்தார்கள். ஆனால் லார்டு மேயர் வெளியில் வரவேற்று விட்டு சென்று விட்டார்கள். மற்ற பகுதிகளுக்கான மேயர் சாஹிப்களும் வந்திருந்தார்கள். கவுன்சில் உறுப்பினர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், பல்வேறு கட்சிகளின் சேர்மன்களும் வந்திருந்தனர். மார்க்க கூட்டமைப்பின் ரவுண்ட் டேபிள் என்ற கமிட்டி ஒன்று உள்ளது. அதன் சேர்மனும் வந்திருந்தார். ஃபல்டா நகரத்தில் பொதுவாக முஸ்லிம்களுக்கெதிரான சிந்தனைகள்

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ் அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனுமில்லை. நிச்சயமாக அவன் உங்களை மறுமை நாள் வரை ஒன்று திரட்டிக் கொண்டேயிருப்பான் என்பதில் ஐயத்திற்கிடமில்லை. பேச்சில் அல்லாஹ்வை விட உண்மையாளன் எவன்? (4:88)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

காணப்படுகின்றன. இன்னும் சொல்வதென்றால், அங்கு எதிர்ப்பு உள்ளது. பழமை வாய்ந்த கிறித்தவத்தின் ஒரு முக்கிய பகுதியாக அது உள்ளது. தனது மரபுகளை நிலைநாட்ட வேண்டும் என்று அங்குள்ள தேவாலயங்கள் விரும்புகின்றன. ஆனால் மக்கள் கிறித்தவத்தை விட்டு மிக தொலைவில் விலகிக் கொண்டே செல்கின்றார்கள்.

எவ்வாறிருப்பினும் அவர்களின் அந்த அச்சத்தின் காரணமாக தேவாலயத்தின் பிரதிநிதிகள் அனைவரும் வரவில்லை. சில அரசியல்வாதிகளும் வரவில்லை. லார்டு மேயர் அவர்களும் கூட நான் சொற்பொழிவு ஆற்ற மாட்டேன். வந்து வரவேற்பேன் என்றே கூறினார். அவர் அங்கு அமர்ந்திருந்தார். ஆனால் மேடையில் வந்து அமரவில்லை. மக்கள் எதிர்ப்பார்கள் என்ற அச்சத்தினால் அமர்ந்து கொண்டார். அங்கு வந்திருந்த சில விருந்தினர்களின் தாக்கம் இதுவாகும்.

ஹாரல் சாஹிப் என்ற நபர் கூறுகின்றார்: நீங்கள் உங்களது சொற்பொழிவில் நாம் அனைவரும் நமக்கிடையிலான ஒன்றுபட்ட கருத்தில் இணைந்து கொள்ள வேண்டும். இதன் மூலமாகவே சகோதரத்துவமும் உலகளாவிய அமைதிக்கான அடித்தளமும் அமைக்கப்படும் என நீங்கள் கூறினீர்கள். இது முற்றிலும் சரியாகும். உலகத்தின் இன்றைய நிலையை நீங்கள் எடுத்துரைத்தீர்கள். அது மிகவும் வேதனையளிக்கக் கூடியதாக உள்ளது. இன்று உலகிற்கு உங்களது தூதுச் செய்திக்கான தேவை உள்ளது. இதற்கு முன்பு இஸ்லாமிய போதனைகளைப் பற்றி எங்களுக்கு இருந்த சிந்தனை சரியானதல்ல என்பதை நான் அறிந்து கொண்டேன் என்று அவர் கூறுகின்றார். இன்றைய மாலைப்பொழுது எனக்கு ஒரு நேர்மறையான மற்றும் அமைதி நிறைந்த தூதுச் செய்தியை தந்துள்ளது எனவும் அவர் கூறுகின்றார்.

அங்குள்ள உள்ளூர் பள்ளிக் கூடத்தின் ஒரு ஆசிரியர் கூறுகின்றார்: உங்களது இந்த சொற்பொழிவை பள்ளிக்கூட மாணவர்களை கேட்கச் செய்து இதிலிருந்து நீங்கள் என்ன புரிந்து கொண்டீர்கள். உங்களது எண்ணப்படி இது எந்த மார்க்கத்தின் போதனையாக இருக்க முடியும் என்று மாணவர்களிடம் கேள்வி கேட்க வேண்டும்.

அவர் கூறுகின்றார்: நான் எனது பள்ளிக்கூட மாணவர்களுக்கு முன்னால் இந்த மாலை நேர உணர்வுகளை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். எனவே குறைந்தபட்சம் எனக்கு நீங்கள் இந்த சொற்பொழிவின் ஆடியோ, வீடியோ பதிவுகளை கண்டிப்பாக தாருங்கள்.

பக்கத்திலுள்ள ஒரு நகரத்தின் மேயர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் இரு தரப்பு அச்சங்கள் மற்றும் தொடர்புகளின் ஒப்பீடுகளை எடுத்துரைத்தார்கள். சமூகத்தினுடைய மேல்மட்டத்தில் காணப்படுகின்ற அச்சங்களை மற்றும் அதற்குரிய காரணங்களை தெளிவாக எடுத்துரைத்தார்கள். சமூகத்தின் அமைதியை சீர்குலைக்கக்கூடிய காரணிகளை தெளிவான சொற்களில் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். அவ்வாறிருந்தபோதிலும் அன்னார் எந்தவொரு பிரிவு மற்றும் கூட்டத்தின் சுய மரியாதையை பாதிக்கும் வகையில் எந்த கடினமான விஷயத்தையும் பேசவில்லை. மாறாக, ஒட்டுமொத்த மனித சமூகத்தின் மனசாட்சி மேலும் உலகளாவிய மனிதத்துவத்தின் மாண்புகளை முற்போக்கு சிந்தனையுடன் எடுத்துரைத்துள்ளார்கள்.

பிறகு அங்குள்ள ஒரு மருத்துவ பெண்மணி கோலர் சாஹிபா கூறுகின்றார்: நீங்கள் எந்த அளவுக்கு திறந்த மனம் படைத்த மக்களாக இருக்கின்றீர்கள்? இது என்மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த சிறப்பை மேற்கொள்ளும்படிதான் உங்களது கலீஃபா கவனமூட்டிக் கொண்டிருந்தார்கள். மனிதத்துவத்தின் மாண்புகளை நிலைநாட்ட ஒவ்வொருவரும் தமது உள்ளத்தை திறப்பது அவசியமாகும். சந்தேகங்களை அகற்றிக் கொள்வது அவசியமாகும். நான் எனது மருத்துவமனையில் மத நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கு முயற்சி செய்கின்றேன். மேலும் மக்கள் ஆன்மீகத்திலிருந்து பயன் பெற வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். எனக்கு நிம்மதியும் அமைதியும் உங்களது நிகழ்ச்சியில் காணக் கிடைத்தது. எனக்கு இதில் கலந்து கொள்ளும் வாய்ப்பை கருதி நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அடுத்து பெர்லினில் இஸ்லாம் மற்றும் ஐரோப்பா என்ற தலைப்பில் நிகழ்ச்சி நடைபெற்றதைப் பற்றி நான் குறிப்பிட்டேன். அதில் 27 பாராளுமன்ற உறுப்பினர்களும், வெளியுறவுத் துறை அலுவலகத்தின் மூன்று பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். ஐந்து பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். அதில் பெர்லின் பல்கலைக்கழகத்தின் துணை தலைவரும், ஜெர்மனியின் கிழக்கு மத்திய பகுதியை சார்ந்த ஸ்டைன் பாக் என்ற பிரபல்யமான பேராசிரியரும் ஒருவர் ஆவார். அதுமட்டுமின்றி US, பிரான்ஸ் போன்ற நாடுகளின் தூதரக அதிகாரிகளும், அரசாங்கத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகளும், பல்வேறு மார்க்கத்தைச் சார்ந்த பிரதிநிதிகளும், தேவாலயங்கள் மற்றும் பல்வேறு சமூகத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். பத்திரிகை மற்றும் இதர ஊடகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். ஆம்னெஸ்டி இன்டர்நேஷனலின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

அலெக்ஸாண்டர் என்ற பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார்: நீங்கள் வழங்கிய அமைதியின் தூதுச் செய்திக்கான அடிப்படையே திருக்குர்ஆனாக இருந்தது. மேலும் உங்கள் கருத்திற்கு ஆதரவாக நீங்கள் திருக்குர்ஆனிலிருந்தும், இஸ்லாத்தின் தோற்றுனரின் கூற்றுகளிலிருந்தும் எடுத்து வைத்தீர்கள். இந்த தலைப்பு புதுமையானதாக இருந்தபோதிலும் தற்போதைய காலத்தின் தேட்டமாகவும் இருந்தது. கலீஃபா அவர்கள் தனது கருத்திற்கு ஆதரவாக இஸ்லாத்தின் ஆரம்ப காலகட்டத்தின் சான்றுகளை எடுத்து வைத்து, இஸ்லாம் மார்க்க ரீதியில் ஆரம்ப நாள் முதல் அனுதாபம் மற்றும் அமைதிக்கான போதனையையே நல்குகின்றது என்பதை நிரூபணம் செய்தார்கள். என்னைப் பொறுத்தவரை இந்த சொற்பொழிவு பெரும் அளவில் பரப்பப்பட வேண்டும். அதன் மூலம் மேற்கத்திய நாடுகளில் இஸ்லாத்தைப் பற்றிய உண்மையான போதனை பொதுமக்களும் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

அடுத்து நீல் ஏலன் சாஹிப் இவர் மத்திய அமைச்சர் ஆவார். அவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தைப் பற்றியும், ஒட்டுமொத்த மார்க்கத்தைப் பற்றியும், சமூகத்தில் அதன் பங்களிப்பைக் குறித்தும் மிகவும் விரிவாகவும், விளக்கமாகவும் ஒப்புமைகளுடனும் எடுத்துரைத்துள்ளார்கள். அதை புரிந்து கொண்ட பிறகு நான் உணர்வது என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக குரல் எழுப்புகிறது என்றால் அதுவொரு மார்க்க பிரிவு அல்லது கூட்டத்தின் உதவிக்காக அல்ல. மாறாக, ஒன்றுபட்ட மற்றும் உலகளாவிய நீதியை மனிதத்துவத்தின் மாண்புகளை பாதுகாப்பதற்கான முயற்சியாகும்.

அடுத்து கிரிஸ்டோஃபர் ஸ்டாக்ஸ் சாஹிப் கூறுகின்றார்: என்னைப் பொறுத்தவரை இது எனது வாழ்க்கையில் முதலாவது நிகழ்ச்சியாகும். முஸ்லிம்கள் நிகழ்ச்சி ஒன்றை நடத்தி அதன் சூழல் அமைதி நிறைந்ததாகவும், அதில் நிகழ்த்தப்பட்ட உரையாடல்கள்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நிச்சயமாக தொழுகை நம்பிக்கை கொண்டவர்கள் (முறைப்படி) குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமையாகும்.(4:104)

A.Basheer Ahmad, Melapalayam

வலுவான ஆதாரங்களை உள்ளடக்கியதாகவும் அமைந்த நிகழ்ச்சி எனது வாழ்க்கையில் இதுவே முதலாவதாகும். வெளிப்படையான நாகரீகம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்குள் ஒளிந்திருக்கும் கருத்து வேறுபாடுகளை எவருடைய பார்வையும் பார்க்க முடியும். நீங்கள் மிக வெளிப்படையாக மனிதத்துவத்தின் தலைமேல் நின்று கொண்டிருக்கின்ற அணு ஆயுத போரின் அபாயத்தை தெளிவான சொற்களில் எச்சரிக்கை செய்துள்ளீர்கள்.

அடுத்து கிரிஸ்டன் பசல் சாஹிப். இவர் பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். அவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் தற்போதைய உலகின் நிலையின் நாடித்துடிப்பை மிகச் சரியாக கணித்துள்ளார்கள். அவர்களின் கணிப்பு மிகச் சரியானதாகும். அவர்கள் வழங்கியுள்ள சிகிச்சைகளில் சமூகத்தின் நிம்மதியற்ற தன்மைக்கு நிரந்தர தீர்வு உள்ளது.

அடுத்து ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவர் ஒரு பெண்மணி ஆவார். சாகிலீன் சாஹிபா கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் தனது கருத்தை எல்லா கோணங்களிலும் தெளிவுபடுத்தி விட்டார். அதில் எவ்வித ஐயத்திற்கும் இடமளிக்கவில்லை. அன்னாருடைய ஒவ்வொரு சொல்லிலும் எனக்கு முழுமையான உடன்பாடு உள்ளது.

அடுத்து ஒரு பேராசிரியர் ஹேர்படு ஹேட் சாஹிப் கூறுகின்றார்: கல்வி மைதானத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் சிறந்த பங்களிப்பை வழங்கி மற்ற ஜமாஅத்துகளுக்கு மத்தியில் மிக தனித்துவமான இடத்தைப் பெற்று விட்டது. எந்த ஜமாஅத்தின் உறுப்பினர்கள் கல்வியின் பக்கம் இந்த அளவுக்கு கவனமூட்டுவார்களோ அவர்களின் இலக்கு தலைமைத்துவமாகவே இருக்குமேயொழிய குருட்டுத்தமனாக ஒன்றைப் பின்பற்றுதலாக இருக்க முடியாது.

அடுத்து ஒரு பாராளுமன்ற உறுப்பினர் யேக்ஸில் சாஹிப் கூறுகின்றார்: நான் வீட்டிற்கு சென்று இந்த சொற்பொழிவை மீண்டும் ஒரு முறை படிப்பேன். என்னால் முடிந்த வரை இதனை நான் மற்றவர்களுக்கு எடுத்துரைப்பேன்.

அடுத்து ஸ்பீன் லேடன் சாஹிபா கூறுகின்றார்: நான் எந்தவொரு மார்க்கத்தையும் சார்ந்தவன் அல்ல. ஆனால் ஒரு மார்க்க தலைவர் என்ற முறையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் எதிர்கால சந்ததிகளின் வேதனைகளை உணர்ந்து காலத்திற்கு முன்பாகவே இன்றைய தலைவர்களை எச்சரித்துள்ளார்கள். அதனால் எனது உள்ளத்தில் ஆழமான தாக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த தூதுச் செய்தி பரவலாக்கப்பட வேண்டும் என்பது எனது ஆசையாகும். ஏனென்றால் மனிதர்களின் ஒட்டுமொத்த புரிதலும் இதனை உணர வேண்டும். விழிப்புணர்வு அடைய வேண்டும். எதிர்கால சந்ததிகள் குறித்த பொறுப்புகளை மனித சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து பேராசிரியர் கிரிஸ்டோஃபர் ஸ்டுஃப் சாஹிப் கூறுகின்றார்: நிகழ்ச்சி எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சொற்பொழிவிலிருந்து நிறைய கற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஏராளமான திருக்குர்ஆன் சான்றுகளை நான் உடனுக்குடன் குறித்துள்ளேன். இனி நான் அதனை வீட்டிற்குச் சென்று மீண்டும் ஒரு முறை படிப்பேன்.

மற்றொரு கிறித்தவ விருந்தினர் கூறுகின்றார்: இஸ்லாம் அமைதிக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது என்பதையும், அமைதியை நிலைநாட்ட விரும்புகின்றது என்பதையும் நான் கேட்டதில்லை. ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவை பல்வேறு தரப்பு தலைவர்களும், பிரதிநிதிகளும் செவியுற்றது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அதே போன்று யூத மத சிந்தனையாளர்களும், மற்ற பிரிவைச் சார்ந்த முஸ்லிம்களும் எனக்கு இங்கு இன்று தென்பட்டார்கள்.

அடுத்து ஒரு விருந்தினர் கூறுகின்றார்: சொற்பொழிவில் அமைதியை எவ்வாறு நிலைநாட்ட முடியும் என்பது பற்றி ஒவ்வொருவருக்கும் அவரது பொறுப்புகள் குறித்து சொற்பொழிவில் கவனமூட்டப்பட்டன. மிக எளிமையான வார்த்தைகள் தெளிவுபடுத்தின. அனைத்து மனிதர்களும் அமைதியுடனும் அன்புடனும் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும். அதற்கு மிக அவசியமாக விஷயம் என்னவென்றால், ஒருவர் மற்றவரை மதித்து நடக்க வேண்டும். மேலும் உலகில் ஒவ்வொரு பொருளும் போதுமான அளவில் உள்ளன. அது அனைவருக்கும் போதுமானதாகும். ஆனால் நிபந்தனை என்னவென்றால், அதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்றும் கலீஃபா அவர்கள் தமது சொற்பொழிவில் கூறினார்கள்.

அடுத்து ஒரு பெண் விருந்தாளி கூறுகின்றார்: நீங்கள் ஏராளமான விஷயங்களின் பக்கம் கவனமூட்டி இருந்தீர்கள். அதில் மிக முதன்மையானது என்னவென்றால், இன்றைய சமூகத்தில் மார்க்கத்திற்கு எந்த முக்கியத்துவமும் வழங்கப்படுவதில்லை. மார்க்கம் எதிர்மறையான கண்ணோட்டத்துடன் பார்க்கப்படுகின்றது. நான் ஒரு கிறிஸ்தவர் என்ற முறையிலும் இந்த விஷயத்தை உணர்கின்றேன். மேலும் கல்வி மற்றும் மார்க்கப் பயிற்சியில் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கலீஃபாவின் கூற்றும் எனக்கு சொற்பொழிவில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக தோன்றுகிறது. இந்த அடிப்படையிலும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஒரு சிறந்த முன்னுதாரணமாகும். தமது புனித வேதம் தனக்கு என்ன போதனையை வழங்குகின்றது என்பது மனிதர்களுக்கு தெரிய வந்தால் ஏராளமான பிரச்சனைகளிலிருந்து நாம் இன்று தவிர்ந்து கொள்ள முடியும்.

எனவே அஹ்மதி இளைஞர்களின் பொறுப்பு என்னவென்றால், அவர்கள் திருக்குர்ஆனை ஓத வேண்டும். அதனைப் புரிய வேண்டும். அதன் மூலமே பிறருக்கு அதனை புரிய வைக்க முடியும். அந்நிலையில் திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் அதன் நுட்பமான ஞானத்தைப் புரிவதற்கும், அதன்படி செயல்படுவதற்கும் அல்லது அதன் போதனையை ஒப்புக் கொள்வதற்கு இந்த மக்கள் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி விடுவார்கள்.

அடுத்து ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பின் பிரதிநிதி கூறுகின்றார்: இங்கு கூறப்பட்ட விஷயங்களைக் கேட்டு எனக்கு மிகுந்த மனநிறைவு ஏற்பட்டுள்ளது. கலீஃபா அவர்கள் தமது இரண்டாவது கலீஃபாவின் சான்றுகளின் ஒளியில் நாகரீகம் மற்றும் பண்பாட்டின் பொருளை விளக்கினார்கள். இரண்டிற்கும் உள்ள பொருளை எடுத்துரைத்தார்கள். அதனை தற்கால அறிஞர் பெருமக்களால் மறுக்க முடியாது. மேலும் கலீஃபா அவர்கள் திருக்குர்ஆனின் வசனங்களை அழகிய முறையில் விளக்கினார்கள். எந்த வசனங்களைக் கொண்டு இஸ்லாத்தின் மீது மக்கள் வெறுப்பிற்குள்ளாகி தவறான முறையில் விளக்கத்தை எடுத்துரைக்கின்றார்களோ அதே வசனத்திற்கு கலீஃபா அவர்கள் சரியான விளக்கங்களை வழங்கி விட்டார்கள்.

அடுத்து ஒரு பெண்மணி நாஹன்தி சாஹிபா கூறுகின்றார்: இந்த சொற்பொழிவு ஐரோப்பாவில் மிகப்பெரிய அளவில் வெளியாகும் என்றால் இஸ்லாத்தைப் பற்றி காணப்படுகின்ற

## திருக்குர்ஆனிலிருந்து...

நாம் உமக்குக் கற்றுத் தந்ததைக் கொண்டு மக்களுக்கிடையில் தீர்ப்பு வழங்குவதற்காக நிச்சயமாக நாமே உண்மையைக் கொண்டு இவ்வேதத்தை உமக்கு இறக்கினோம். (4:106)

M.Y. Shahul Hameed, Melapalayam

அச்சங்கள் விலகி விடும். ஒரு சாரார் தரப்பில் காணப்படுகின்ற எதிர்மறை தாக்கங்கள் நீங்கி விடும்.

அடுத்து மஹ்தி ஆபாத் பள்ளிவாசல் திறப்பு விழா நடந்தது. அதில் ஜெர்மனியின் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். லார்டு மேயர்கள், மாநில சட்டசபை உறுப்பினர்கள், சட்டசபை தலைவர் மற்றும் துணை தலைவர் மற்றும் இந்த பகுதியின் ஐந்து மேயர்கள், பாராளுமன்றத்தின் சேர்மன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் சுமார் 170 விருந்தினர்கள் கலந்து கொண்டார்கள்.

துணை மேயர் ஒருவர் கூறுகின்றார்: நான் திரும்பிச் சென்று கலீஃபாவின் கூற்றுக்களை பரப்புவேன். இவர் ஒரு பெண்மணி ஆவார். அவர் கூறுகின்றார்: இஸ்லாத்தின் மீது எவர் ஆட்சேபனை செய்தாலும் நான் கலீஃபாவின் கூற்றுக்களை எடுத்து வைத்து இஸ்லாத்தை தற்காப்பு செய்வதற்கு முயற்சி செய்வேன். நீங்கள் இன்று விருந்தினர்களாகிய எங்களுடன் மட்டும் உரையாடவில்லை. மாறாக, உங்களது ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கும் சில விஷயங்களை கவனமூட்டியுள்ளீர்கள். பள்ளிவாசல் கட்டியதற்குப் பிறகு நீங்கள் மனித இனத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்றும் நீங்கள் கவனமூட்டி இருந்தீர்கள்.

அடுத்து ஒரு பெண்மணி அஞ்சலீக்கா சாஹிபா கூறுகின்றார்: நமது அன்றாட நடவடிக்கைகள் மற்றவர்களுடன் எப்படி உள்ளது? என்பதை நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்ற பாடமும், நண்பர்களுக்கும், அந்நியர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற பாடமும் உங்களது சொற்பொழிவிலிருந்து இன்று எனக்கு கிடைத்துள்ளது.

அடுத்து ஒரு விருந்தினர் கூறுகின்றார்: இங்கு வருவது எனக்கு மிகவும் பிடித்துள்ளது. இஸ்லாத்தைப் பற்றிய ஏராளமான அச்சங்கள் நீங்கி விட்டன. மத நல்லிணக்கத்தைப் பற்றிய விஷயங்களை நீங்கள் எடுத்துரைத்தீர்கள். அது அனைத்து மதத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்தாகும்.

மற்றொரு விருந்தினர் கூறுகின்றார்: உங்களது சொற்பொழிவில் எனக்கு பிடித்த மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் என்னவென்றால், அனைத்து மார்க்கத்தையும் ஒன்றிணைக்கக்கூடிய அம்சங்களை தாங்கள் எடுத்துரைத்தீர்கள். நான் ஒரு கிறித்தவ தேவாலயத்தின் உறுப்பினர் ஆவேன். எங்களது இறைவணக்க வழிமுறைக்கும், உங்களது மார்க்கத்திற்கும் இடையில் ஏராளமான கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் அவ்வாறு இருந்தபோதிலும் ஜமாஅத்தின் இமாம் அவர்கள் அனைவரும் ஆமோதிக்கக்கூடிய விஷயங்களையே எடுத்துரைத்தார்கள். எனது நம்பிக்கை என்னவென்றால், நம் அனைவருக்குமான இறைவன் ஒருவனே ஆவான். வணக்க வழிமுறைகளில் மட்டுமே வேறுபாடு உள்ளது. (குறைந்தபட்சம் இவர்கள் இந்த அளவுக்காவது அருகில் வந்து விட்டார்களே!)

அடுத்து ஒரு விருந்தினர் கூறுகின்றார்: நீங்கள் பெண்களின் அந்தஸ்தை உங்களது சொற்பொழிவில் மிக அழகிய முறையில் எடுத்துரைத்தீர்கள். அதன் மூலம் இஸ்லாத்தின் பெண்களின் அந்தஸ்து குறித்தும், சமூகத்தில் பெண்களின் அந்தஸ்து குறித்தும் தெரிய வந்தது.

இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை புரிந்து கொள்வதற்காக அல்லாஹ் அவர்களின் உள்ளங்களை திறப்பானாக. மேலும் அவர்கள் அதனை ஒப்புக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருப்பார்களாக. உண்மையான ஏகத்துவத்தை ஒப்புக் கொள்ளக் கூடியவர்களாகவும் அவர்கள் ஆகட்டுமாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் வரக்கூடியவர்களாகவும் அவர்கள் ஆகட்டுமாக. இதில்தான் அவர்களின் வாழ்க்கை உள்ளது. தற்காலிக உலகியல் முன்னேற்றங்களை அவர்களின் வாழ்க்கைக்கு பாதுகாப்பானதாக அவர்கள் கருதுகின்றார்கள். அது தவறாகும். அது ஒருபோதும் அவர்களின் வாழ்க்கைக்கு பாதுகாப்பாக அமையாது.

ஊடகங்களைப் பற்றியும் நான் சற்று குறிப்பிட்டு விடுகின்றேன். ஹாலாந்து நாட்டின் இரண்டு டிவி சேனல்கள் ரிப்போர்ட்டுகளை ஒளிபரப்பின. 75 ஆயிரம் நபர்கள் வரை செய்தி சென்று சேர்ந்தது. பைத்துல் ஆஃபிய்யத் நிகழ்ச்சி அல்மே நகரில் இரண்டு டிவி சேனலில் ஒளிபரப்பானது. அதன் மூலம் 75 ஆயிரம் நபர்கள் வரை செய்தி சென்று சேர்ந்தது. சமூக ஊடகங்கள் மூலமாகவும் ஆயிரக்கணக்கான நபர்கள் வரை செய்தி சென்று சேர்ந்துள்ளது. ஹாலாந்து சுற்றுப் பயணத்தின் செய்திகள் ஊடகங்கள் வாயிலாக 16 லட்சம் நபர்கள் வரை செய்தி சென்று சேர்ந்திருக்கும் என அவர்கள் நம்புகின்றனர். இதில் அதிகமாக அல்மேரா நகரத்து பள்ளிவாசல் நிகழ்ச்சி தொடர்பான செய்திகள் ஒளிபரப்பாகியுள்ளன.

பிரான்ஸ் நாட்டினுடைய நியூஸ் ஏஜென்ஸி அல்லது நேஷனல் நியூஸ் ஏஜென்ஸி சார்பாக UNESCO வில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவை அடிப்படையாகக் கொண்டு கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த கட்டுரையாளர் கலீஃபா அவர்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளைப் பற்றி எதுவும் பேசவில்லை என்பதை குறிப்பிட்டு தனது ஆச்சரியத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அடுத்து ஸ்ட்ராஸ்பெர்க் நகரத்தில் மஸ்ஜிது மஹ்தி திறப்பு விழா தொடர்பான செய்திகள் DNA என்ற பத்திரிகையில் வெளியாகி உள்ளது. ரேடியோ சேனலிலும் செய்தி வெளியாகி உள்ளது. அதே போன்று Outlets மூலமாகவும் பல மில்லியன் மக்கள் வரை செய்தி சென்று சேர்ந்துள்ளது.

ஜெர்மனியில் வேஸ் பாதன் மற்றும் ஃபல்டா பெர்லின் மற்றும் மஹ்தி ஆபாத் ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் செய்திகளும் ஒளிபரப்பாகி உள்ளன. அவர்களின் எண்ணப்படி ஒட்டுமொத்த ஆய்வின் அடிப்படையில் 13 செய்தித்தாள்கள் மற்றும் 4 டிவி சேனல்கள், ஒரு ரேடியோ சேனல் மற்றும் ஒரு Electronic Media வில் Report வெளியாகி உள்ளது. வெளியுறவுத் துறை செயலரின் அறிக்கை மற்றும் எண்ணத்தின் அடிப்படையில் 49 மில்லியன் மக்கள் வரை பல்வேறு ஊடகங்கள் வாயிலாக தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது.

இதே போன்று Review of Religions மூலமாகவும் சுமார் ஒன்றரை மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது. நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ் இந்த தூதுச் செய்தியை மக்களுக்கு புரிவதற்கு காரணியாக ஆக்குவானாக.

தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன். அது இந்தியாவின் கேரளா மாநிலத்தின் பாலக்காட்டைச் சார்ந்த மதிப்பிற்குரிய மவ்லவி மஹ்மூது அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். 54 வயதில் அன்னார் அக்டோபர் மாதம் 15 ஆம் தேதி வஃபாத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் தந்தையான மதிப்பிற்குரிய மவ்லவி K. முஹம்மது அலவி சாஹிப் மூலமாக

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்விடம் மன்னிப்பைக் கோருவீராக. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.(4:107)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 05 December 2019 Issue No. 49

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அஹ்மதிய்யத் கிடைத்தது. அன்னார் அஹ்மதியல்லாத நிலையில் மிகவும் பிரபலமான மார்க்க அறிஞராக இருந்தார்கள். அஹ்மதிய்யத்தைப் ஒப்புக் கொண்டதன் காரணமாக அன்னாருக்கு மிகக் கடுமையான எதிர்ப்பை சந்திக்க நேரிட்டது. அன்னார் மூலமாக கேரளா மாநிலத்தில் நூற்றுக்கணக்கான மக்களுக்கு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் நற்பாக்கியம் கிடைத்தது. மர்ஹூம் மவ்லவி K. மஹ்மூது அஹ்மது சாஹிப் தமது தந்தையின் அறிவுரைக்கேற்ப கல்லூரி படிப்பை நிறுத்தி விட்டு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். 1988 ஆம் ஆண்டு ஜாமிஆ தேர்ச்சி பெற்றார்கள்.

மர்ஹூம் ஒரு பெரும் அறிஞராக இருந்தார்கள். இறையச்சமுடையவராகவும், நோன்பையும், தொழுகையையும் பேணக் கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், துஆ செய்யக் கூடியவராகவும், ஏழைகளை பராமரிக்கக் கூடியவராகவும், பொறுமையாளராகவும், நன்றியுணர்வு கொண்டவராகவும், கலப்பற்ற தன்மை கொண்ட மனிதராகவும் திகழ்ந்தார்கள். திருக்குர்ஆன், ஹதீஸ், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்களின் புத்தகங்களை ஆழமாக படித்திருந்தார்கள். அரபி, உருது, மலையாளம் மற்றும் தமிழ் மொழிகளில் போதுமான அளவில் புலமை பெற்றிருந்தார்கள். மர்ஹூம் தனக்கு சொந்தமாக நூலகம் ஒன்றை வைத்திருந்தார்கள். அதில் எண்ணற்ற முக்கியத்துவம் வாய்ந்த புத்தகங்கள் இடம் பெற்றிருந்தன.

கேரளா, தமிழ்நாடு, லக்ஷதீப் போன்ற மாநிலங்களிலும், குவைத் உட்பட பல வெளிநாடுகளிலும் அன்னாருக்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்திருந்தது. அன்னார் ஒரு சிறந்த சொற்பொழிவாளராகவும், முனாஸிரா செய்யக் கூடியவராகவும் இருந்தார்கள். 1994 ஆம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க அன்னார் மதிப்பிற்குரிய தோஸ்த் முஹம்மது சாஹிப் ஷாஹிது மற்றும் ஹாபிஸ் முஸஃப்பர் அஹ்மது சாஹிப் அவர்களுடன் இணைந்து ஜமாஅத்தின் ஒரு பெரிய எதிரிக்கு எதிராக முனாஸிரா செய்வதற்கு நற்பாக்கியம் கிடைத்தது. மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள்.

அன்னார் இரண்டு மனைவியையும், மூன்று மகள்களையும் தனது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் இரண்டு மகன்கள் இறை அருளால் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் ஆவர்.

அன்னாரின் ஒரு மருமகன் எழுதுகின்றார்: ஜாமிஆவின் கடைசி ஆண்டு விடுமுறையின்போது அன்னார் தனது தந்தையின் வழிகாட்டலுக்கேற்ப வீட்டிற்குச் செல்லவில்லை. மாறாக, இரண்டு மாதத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களை படிப்பதற்காக மட்டுமே அர்ப்பணித்துக் கொண்டார்கள். ஜாமிஆவின் மாணவர்களுக்கு இதில் ஒரு பெரும் முன்மாதிரி உள்ளது.

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் அஹ்மதிய்யத்தை அழிப்பதற்காக அங்குள்ள அனைத்து அஹ்மதியல்லாத முஸ்லிம் பிரிவுகளும் ஒன்றிணைந்து ஒரு அமைப்பு ஒன்றை உருவாக்கினார்கள். அதற்கு அஞ்சுமன் இஷாஅத்தே இஸ்லாம் என்று பெயர் வைத்தார்கள். இது ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பு தொடர்ந்து கேரளாவின் தொலை தூரப் பகுதிகளில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராகவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களிலிருந்து ஆட்சேபனையை எடுத்து வைத்தும் பொதுக் கூட்டங்களை நடத்தி வந்தனர். அதற்கு பதிலளிக்கும் வகையில் ஜமாஅத் மர்ஹூமின் தலைமையில்தான் பல்வேறு இடங்களில் கூட்டங்களை நடத்தியது.

2015 ஆம் ஆண்டு அஞ்சுமனே இஷாஅத்தே இஸ்லாம் என்ற அமைப்புடன் ஜமாஅத் ஒரு வரலாற்று சிறப்புமிக்க விவாதத்தை நடத்தியது. அதில் ஜமாஅத்தின் சார்பாக முனாஸிரா செய்யக் கூடியவராக தொண்டாற்றும் நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்தது. அதுமட்டுமின்றி அஹ்லே குர்ஆன் மற்றும் அஹ்லே ஹதீஸ் ஆகிய பிரிவினரிடமும் அல்லாஹ்வின் அருளால் அன்னார் வெற்றிகரமான மார்க்க விவாதத்தை செய்யும் பாக்கியம் பெற்றார்கள். மர்ஹூம் நோன்பையும், தொழுகையையும் பேணக் கூடியவராக இருந்தார்கள். சிறு வயதிலேயே தஹஜ்ஜுத் தொழக்கூடிய பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள்.

அன்னாரின் மருமகன் ஒருவர் எழுதுகின்றார்: மர்ஹூமிற்கு சிறு வயதில் ஒரு முறை தஹஜ்ஜுத் தொழ முடியாமல் போனது. அப்போது அன்னாருடைய தந்தை அன்னாரிடம், மகனே! உமக்கு மகாமே மஹ்மூது (புகழுக்குரிய இடம்) கிடைப்பதை நீ விரும்பவில்லையா? என்று கேட்டார்கள். அன்று முதல் அன்னார் அந்த உயிலை முழு மூச்சாக பேணி வந்தார்கள். வாழ்நாள் முழுவதும் அதன்படி அமல் செய்து வந்தார்கள்.

எந்த அளவுக்கு என்றால் நோய்வாய்ப்பட்டபோதும் கடுமையான பலவீனத்தின் நிலையிலும் அதில் நிலைநின்றார்கள். கிலாஃபத்துடன் உணர்வுப் பூர்வமான அன்பும், பற்றும் கொண்டிருந்தார்கள். கலப்பற்ற தன்மையுடன் ஆழமான தொடர்பு இருந்தது. தஃலீம், தர்பிய்யத் நிகழ்ச்சிகளில் ஒரு பெரும் பகுதி கிலாஃபத்திற்காக ஒதுக்கி இருந்தார்கள். அந்த தலைப்பிலேயே பேசி வந்தார்கள். அந்த தலைப்பில் உரையாற்றும்போது பெரும்பாலும் உணர்ச்சிவசப்பட்டு வந்தார்கள்.

2015 ஆம் ஆண்டு ஒரு பெண்மணி தனது பிள்ளைகளுடன் அஹ்மதி ஆனார். அவளது கணவர் வெளிநாட்டிலிருந்து வந்தபோது அன்னார் அவருக்கு தப்லீக் செய்தார்கள். அப்போது கிலாஃபத்தை ஒப்புக் கொள்வதற்கான அவசியம் என்ன என்று அவர் கேட்டார். அதற்கு மர்ஹூம் கிலாஃபத்தின் அந்தஸ்து குறித்தும், கிலாஃபத்தின் முக்கியத்துவம் மற்றும் அருட்களைக் குறித்தும் எந்த அளவுக்கு உணர்வுப்பூர்வமாக எடுத்துரைத்தார்கள் என்றால் அவர்களின் கண்கள் கண்ணீர் வடித்தன. அதன் தாக்கம் அஹ்மதி அல்லாதவர் மீது எந்த அளவுக்கு ஏற்பட்டதென்றால் மற்ற விஷயங்கள் எல்லாம் சரிதான் என்று கூறி அன்னாரின் கூற்றை கேட்டதும் பைஅத் செய்து விட்டார்.

உள்ளபடியே அன்னார் கிலாபத்தின் சிறந்த உதவியாளராக இருந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்புடனும் கருணையுடனும் நடந்து கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அன்னாரின் சந்ததிகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad